ஆரம்பக்கல்வி

ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும்
ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை
ஆசிரியர் : பி. வீரராகவன்

வருட சந்தா. ரூ. 3. தனிப் பிரதி 4 அணா

மலர் 13 } ஜூலை 1952 { இதழ் 7

வந்தார்! தந்தார்!!

கேட்டது ரொட்டி, தந்தது கல்.

“அரசாங்கத்தின் ஏராளமான செலவை முன்னிட்டும், நிதி நெருக்கடியைக் கருதியும், ஆரம்ப, செகண்டரி பள்ளிக்கூட உபாத்தியார்களின் சம்பளத்தை உயர்த்த முடியாது.”

(கல்வி மந்திரி, M. V. கிருஷ்ண ராவ்.)

“சர்க்கார் காரியாலய பியூன்களைவிட உபாத்தியாயர்களின் சம்பளம் குறைவாக இருப்பது மந்திரிக்குத் தெரியுமா?

(நாகி ரெட்டி)

“உபாத்தியாயர்களின் சம்பள விஷயம் சர்க்காரின் கவனத்தில் இருந்து வருகிறது.”

(கல்வி மந்திரி)

"குறைந்த பட்சம் சம்பளம் நிர்ணயிக்கும் பொழுது, தொழிலாளருக்கு அடுத்தபடியாக உபாத்தியாயர்களுக்கும் சம்பளம் நிர்ணயிக்கும்படி இந்திய சர்க்காரைக் கேட்டுக் கொள்ளப்படுமா?"

(ராமமூர்த்தி)

"சம்பள விஷயத்தைப்பற்றி சென்னை சர்க்கார் ஆலோசித்து வருகின்றனர். இதில் இந்திய சர்க்காருக்குச் சம்பந்தமில்லை."

(கல்வி மந்திரி.)

ஆசிரியர்களுக்குச் சம்பள உயர்வைத் தள்ளிப் போடுவது அபாயகரமானதல்லவா?"

(ராமமூர்த்தி)

"சமீபத்தில் ஆசிரியர் குழந்தைகளுக்குக் கல்விச் சலுகை தரப்பட்டுள்ளது."

(கல்வி மந்திரி.)

*　　　*　　　*

மேற்குறித்த குறிப்புகள், சமீபத்தில் சட்ட சபையில் கல்வி சம்பந்தமான விவாதத்தில் நடந்த சில முக்கிய குறிப்புகளாகும்.

"ஆச்சாரியார் வந்தார்! ஆரம்பாசிரியர்களுக்கு என்ன தந்தார்? என்று ஆராய வேண்டிய அவசியத்தில் அல்லல்படும் ஆரம்பாசிரியர்களாகிய நாம் இன்று இருக்கின்றோம்."

வீட்டு அலவன்ஸ், பஞ்சப்படி, லீவு வசதி ஆகியவற்றை நியாயமான அளவிற்கு உயர்த்த வேண்டுமென்று பணிவுடன் வேண்டினோமே, அந்த வேண்டுகோளுக்குத்தான் சம்மதத்தை அறிவித்திருக்கின்றாரா ஆச்சாரியார்? கிடையாது. காலை முதல் மாலை வரையில் ஓயாமல் உழைக்கிறோம். அப்படி உழைத்தும் நாம் பெறுகின்ற ஊதியம் வயிறார உண்பதற்கும், போதுமானதாக இல்லை. ஆகவே, அந்த ஊதியத்தைச் சிறிதேனும் உயர்த்திக் கொடுங்கள் என்று கேட்டோம். அந்த வேண்டுகோளையும் ஒப்புக்கொண்டாரா ராஜாஜி? அதுவுமில்லை. அப்படியானால் என்னதான் ஆரம்பாசிரியர்களுக்கு ஆதரவு காட்டியிருக்கின்றார்? இந்தப் புதிய மந்திரி சபையில் பழைய ராஜாஜி, என்று நமக்கு விளங்க வில்லை.

"ரொட்டியைக் கேட்டால் கல்லைக் கொடுத்தார்" என்ற பழமொழியைப்போல், நாம் கேட்டது வாழ்க்கையின் அடிப்படைக்கு வேண்டிய சம்பள உயர்வு, ஆனால், கொடுக்கப்பட்டது ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு படிக்கச் சம்பள வசதி. அந்தச் சம்பள வசதியும் உண்மையில் ஆரம்பாசிரியர்களுக்கு எவ்வளவு தூரம் பயன் படுகிற தென்பதைச் சற்று ஆராய்வோம்.

300 ரூபாய்க்கு மேற்படாமல் மாத ஊதியம் வாங்குகின்ற ஆசிரியர்களின் பிள்ளைகள், முதல் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரையில் படிக்கின்றவர்களாயிருந்தால், அவர்கள் சம்பளமே இல்லாமல் இலவசமாகவே படிக்கலாமாம். அதற்குமேல் நான்காம் பாரம் முதல் ஆறும் பாரம் வரையில் படிக்கவேண்டுமானால் முழுச் சம்பளமின்றி அரைச்சம்பளம் கட்டியே படிக்கலாமாம். வந்த ஆச்சாரியார் ஆரம்பாசிரியர்கள்பால் காருண்யம்கொண்டு தந்திருக்கின்ற மகத்தான உதவி இதுதான்.

நமது மாகாணத்திலுள்ள சுமார் 1,50000 ஆரம்ப ஆசிரியர்களில் பெரும்பாலோர் அனைவரும் பிற்பட்ட வகுப்புகள் என்ற தலைப்பின் கீழ் வருகின்றவர்களாவார்கள்.

பிற்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த மாணவர் அனைவர்க்கும், அவர்கள் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்திற்காக ஆட்சியாளர்களால் அரைச்சம்பளம் தரப்பட்டு வருகின்றது நெடுங்காலமாக. ஆகவே, ஆரம்பாசிரியர்கள் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களானால் ஏற்கெனவே அவர்கள் பிள்ளைகளுக்கு அரைச்சம்பள சலுகை இருந்து வருகின்றது. இந்தச்சலுகையால் பெரும்பாலான ஆரம்பாசிரியர்கட்கு எத்தகைய பெரும்பயனும் உடனடியாக ஏற்பட்டுவிடவில்லை. நாம் கேட்டது ரொட்டி, ஆச்சாரியார் தந்தது "கல்" என்று சொன்னால் மிகையாகாது.

ஆரம்பாசிரியர்களை அலட்சியம் செய்த மாஜி கல்வி மந்திரி மாதவமேனன்கூட, பதவியைவிட்டுப் போகும்பொழுது லையர் கிரேட் எயிடட் ஆரம்பாசிரியர்களுக்கு ரூ. 27-லிருந்து 30 ரூ. ஆகவும்; செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு 37-லிருந்து 50-ஆக உயர்த்திக் கொடுக்கும்படி ஒரு திட்டம் வகுத்து, அதற்கான பணத்தையும் ஒதுக்கி வைத்துப் போனதாக பல முக்கிய வட்டாரங்களில் சொல்லப்பட்டது. அந்தப்படியாவது ராஜாஜி செய்திருந்தால் இவர் ஆட்சிப்பீடம் ஓரளவு போற்றத்தக்கதாக இருக்கும். இதைப் பற்றிச் சட்ட சபையில் பல எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் கேட்டபொழுது ஆசிரியர்கள் சம்பளத்தைப்பற்றி ஆலோசித்துக்கொண்டிருப்பதாக கல்வி மந்திரி பதிலளித்துள்ளார். இப்படி ஆலோசித்துக்கொண்டிருந்தால், அரசாங்கத்திற்கே ஆபத்தல்லவா? என்றும், அரை வயிற்றுச் சாப்பாட்டிற்கு அல்லல்படும் ஆரம்பாசிரியர்கள் எப்படிப் பிள்ளைகளுக்கு உற்சாகமாகக் கல்வி போதிக்க முடியும்? அப்படி மனநிம்மதியின்றி போதிக்கப்படும் கல்வியின் திறன் குறைந்து விடுவதால் அரசாங்கம் கல்விக்காகச் செலவிடப்படும் பணம் வீணாக்கப்படவில்லையா? என்றெல்லாம் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் காரசாரமாக வாதாடியும், சற்றும் செவிசாய்க்காமல், புதிய கல்வி மந்திரி, அரசாங்

கத்தில் பணமில்லை என்ற பழைய பல்லவியைப் பாடியிருக்கின்றார். அதுமட்டுமல்ல, ஆசிரியர்களின் குழந்தைகளுக்குக் கல்விச் சலுகை தரப்பட்டிருக்கின்றது என்று மழுப்பிப் பேசியிருக்கின்றார். ஆனால், நாம் கேட்டது "ரொட்டி" புதிய கல்வி மந்திரி தந்தது "கல்"

"பள்ளிக்கூடங்கள் அதிகமானால் படித்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். படித்தவர்கள் அதிகமானால் வேலையில்லாத் திண்டாட்டம்பெருகும். ஆகையால் புதிதாக பள்ளிக்கூடங்கள் கட்டுவது கூடாது" என்று சென்னைக் கவர்னர் ஸ்ரீ பிரகாசா சேலம் நகர சபையின் வரவேற்புக் கூட்டத்தில் பேசியிருக்கின்றார். பிரதம மந்திரி ராஜாஜியோ, சலவைத் தொழிலாளர் கூட்டத்தில் பேசும் பொழுது, "மக்கள் அதிகமாகப் படிக்கக் கூடாது. படித்தாலும், தங்கள் தங்கள் ஜாதித்தொழிலை, பரம்பரைத் தொழிலை விட்டுவிடக் கூடாது," என்று வழுக்கிப்போன வருணாஸ்ரம தர்மத்தை உபதேசம் செய்கின்றார். இருவரும் நமது மாகாணத்தின் மக்கள் ஆட்சியின் பொறுப்பை ஏற்று நடத்துபவர்கள். ஒருவர் பள்ளிக்கூடம் வேண்டாமென்கிறார்–மற்றொருவர் படிப்பு அதிகம் வேண்டாமென்கிறார், 100–க்கு 85 பேர் தற்குறிகளாக உள்ள நமது மாகாணத்தில். ஆனால் இந்திய அரசியல் சட்டத்தில் மட்டும் பதினான்கு வயதுள்ள ஒவ்வொரு பிள்ளையும் 10 ஆண்டுகளில் நாட்டில் படித்தாக வேண்டுமென்று எழுதப்பட்டிருக்கின்றது. சட்டத்தை நடத்தப் பொறுப்புவாய்ந்த இரு தலைவர்களின் மேற்குறித்த பேச்சுக்களினால், நாட்டில் கல்வியைப் பரப்ப எவ்வளவு அக்கரை கொண்டுள்ளார்கள் என்பது நன்றாக விளங்குகின்றது. கடவுளின் பெயரைச் சொல்லிக் கொண்டு, பஜகோவிந்தம் பாடிக்கொண்டு, மக்கள் பெரும்பாலும் படியாமல் இருக்கும் காரணத்தால், அவர்களது அறியாமையைப் பயன்படுத்திக்கொண்டு, காந்தியாரின் பெயரைச் சொல்லிக் கொண்டு, வீழ்ந்த காங்கிரஸ் ஆட்சியை மறுபடியும் நமது மாகாணத்தில் தலை தூக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடு, ஆச்சாரியார் அரும்பாடு படுகின்றாரே ஒழிய, நாட்டில் ஆரம்பக்கல்வி பரவ, அதற்கு அடிப்படையான ஆரம்பாசிரியர்களின் வாழ்க்கையைச் செப்பனிட, பாடுபடுவதாகத் தெரியவில்லை. இதைத் தெரிந்துதான், ஆரம்பாசிரியர்களில் பலர் ஒரே மூச்சாக, சென்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சியை எதிர்த்து ஓட்டுப் போட்டு, மறுபடியும் பழைய காங்கிரஸ் கட்சியை ஆட்சிப் பீடத்தில் அமரக் கூடாதபடி மைனாரட்டியாக்கினார்கள்.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக, காங்கிரசை எதிர்த்த சில சுயேச்சை சட்டசபை அங்கத்தினர்கள், தங்கள் சுய நலக் காரணத்தினால், ராஜாஜியின் சூழ்ச்சியில் சிக்கி, மைனாரட்டியான காங்கிரஸை இன்று மெஜாரட்டியாக ஆக்கி ஆட்சி நடத்தி வருகின்றனர், நித்திய

கண்டம் பூர்ண ஆயுசுடன். ராஜாஜியின் ஆட்சியில் நிச்சயமாக இந்த மாகாணத்தில், ஆரம்பக்கல்வி விஸ்தரிப்போ, ஆரம்பாசிரியரின் வாழ்க்கை முன்னேற்றமோ, எதையும் நாம் எதிர்பார்க்க முடியாது. ஆனால், ஆச்சாரியாருக்கு ஆரம்பாசிரியர்கள் சார்பாக ஒன்று மட்டும் எடுத்துக்காட்ட ஆசைப்படுகின்றோம். நமது தென்னாடு பொறுத்த மட்டில் மக்கள் தற்குறிகளாக இருக்கலாம். ஆனால், இன்று மக்களெல்லாம் வறுமையின் காரணமாகத் தெளிவு பெற்று, பகுத்தறிவாளர்களாக, வெகு சீக்கிரமாக மாறிக்கொண்டு வருகிறார்களென்பதை ஆச்சாரியார் உணரவேண்டும். அதிலும் குறிப்பாக, ஆரம்பாசிரியர்கள் பெரும்பாலும், நாளைய ஆட்சிக்கு வரும் மக்களைச் சீர்திருத்தம் செய்வது ஒரு புறமிருக்க, இன்றுள்ள ஆட்சிப் பீடத்தையே மாற்றி நல்லதோர் ஆட்சிப் பீடத்தை நாட்டில் அமைக்க, கிராம மக்களை சீர்திருத்தி வருகிறார்களென்பதை ஆச்சாரியார் உணர வேண்டும். ஆரம்பாசிரியர்களின் ஆதரவு இருந்தால்தான் ஆச்சாரியாரின் ஆட்சிப் பீடம் சில காலமாவது நீடிக்கும் என்பதை எடுத்துக்காட்ட ஆசைப்படுகின்றோம். ஆச்சாரியார் வெகு தந்திர சாலி, சாமார்த்திய சாலி, ஆரம்பாசிரியர்களின் சக்தியை அறியாதவரல்ல- சென்ற தேர்தலில் ஆரம்பாசிரியர்கள் காங்கிரஸ் கட்சியை எதிர்த்துக் கவிழ்த்ததின் காரணத்தினால், ஆரம்பாசிரியர்களை ஒடுக்கினால் தான், தன் ஆட்சிப் பீடம் காங்கிரஸ் கட்சி, தென்னாட்டில் தழைக்கும் என்று எண்ணி, அவர்களின் முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டைபோடு வாரானால், நிச்சயமாக மறுபடியும் தென்னாடு பொறுத்த மட்டில் காங்கிரஸ் அடியோடு கரைந்து போகும் வழியை ஆரம்பாசிரியர்கள் கடைப்பிடிக்க வேண்டிய அவசியம் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ஆரம்ப ஆசிரியர்களுக்கு எந்தக் கட்சியின் மீதும் காதலோ, விரோதமோ தனிப்பட்ட முறையில் கிடையாது. நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு, அடிப்படையாயுள்ள ஆரம்ப ஆசிரியர்களின் நல்வாழ்வுக்கு முட்டுக்கட்டைபோடும் எந்தக் கட்சியானாலும் அந்தக் கட்சியை முழுமூச்சுடன் எதிர்த்தே தீரும். நாட்டு மக்களின் அறிவு வளர்ச்சியில் அக்கரையிருக்கும் காரணத்தால். இதை ஆச்சாரியார் உணர்வாரா?

மாதாந்திரக் கணக்குடன் வரவு செலவு கணக்கு அனுப்ப வேண்டுமாம்

சமீபத்தில் சென்னையில் சில பாடசாலைகளுக்கு மாதந்தோறும் கிராண்டுக்காக, அனுப்பப்படும் (Monthly Return) மாதாந்திர கணக்குடன் பிரதிமாதம் பாடசாலையின் வரவு செலவு கணக்கையும் சேர்த்து அனுப்ப வேண்டுமென்று ஒரு அறிக்கை டிப்டி இன்ஸ்

பெக்டர்களால் அனுப்பப்பட்டிருக்கின்றது. இது அரசாங்க அறிக்கை அல்ல, கல்வியிலாகா (Divisional Inspector) சுற்றறிக்கை எனச் சொல்லப்படுகிறது. இது வரை ஒவ்வொரு ஆரம்பப் பாடசாலையும் Deputy Inspectorகள் பாடசாலை பரீட்சை செய்யும்பொழுது ஒரு தரம் பாடசாலையின் வரவு செலவு கணக்கையும், மார்ச்சு 31உ வருட முடிவில் வருடாந்திரக் கணக்கு அனுப்பும் பொழுது மற்றொரு முறையும், வருடாந்திர வரவு செலவு கணக்கு கொடுக்கப் படுகின்றது. அப்படிக் கொடுக்கப்படுவதின் நோக்கம் ஒரு பாட சாலைக்கு, அரசாங்கம் எவ்வளவு பணம் கொடுக்கின்றது, பொது மக்களிடத்திலிருந்து சம்பளமாக எவ்வளவுவசூல் செய்யப்படுகின்றது, அந்த மானேஜ் மெண்டார் தங்கள் கையில் இருந்து எவ்வளவு போடுகிறார்கள் என்பதையெல்லாம் அறிந்துகொள்ளவே வருடாந் திரக்கணக்கு பயன் படுகின்றது.

ஆனால் இப்பொழுது பாடசாலையின் மாதாமாதம் வரவு செலவு கேட்பதின் உட்கருத்து என்ன என்பது நமக்கு விளங்கவில்லை. உயர்தரப் பாடசாலைகளில் (High Schools) ஏராளமான சம்பள வசூலும், பொதுமக்களிடத்திலிருந்து பல காரணங்களைக் காட்டிப் பெருவாரியாக பணமும் வசூலிக்கப்படுகின்றது. அத்தகைய பாட சாலையில் இப்படி மாதாந்திரக் கணக்கு கேட்பது நியாயமும் ஒழுங் குமாகும். பெரும்பாலான எயிடட் எலிமெண்டரி பாடசாலைகள் கிராமங்களில் உள்ளவை; சம்பள வசூலே கிடையாது. முனிசி பாலிட்டியின் எல்லைக்குள்ளும், பணச்செல்வாக்குள்ள சில கிராமங்க ளிலும் சிறிது சம்பள வசூல் செய்யப்படுகின்றது. அரசாங்கத்தில் கொடுக்கப்படும் கிராண்டுத் தொகை ரூ. 27 உடன் ரூ. 3 மானேஜ் மெண்ட் சேர்த்துக்கொடுக்க முடியாத நிலைமையில் பெரும்பாலான எயிடட் பாடசாலைகள், பொருளாதாரம் வறண்ட நிலையில் நடத்தப் பட்டு வருகின்றன.

சென்ற ஆண்டு அரசாங்கம், ஒவ்வோர் மானேஜ்மெண்டும் ரூபாய் 27–வுடன் ரூ. 3 சேர்த்துக் கொடுக்காவிட்டால் அப்பாட சாலையின் அங்கிகாரம் ரத்து செய்யப்படுமென்று உத்தரவிட்டனர். அத்தகைய உத்தரவினால், இந்த ஆண்டு சுமார் 500 எலிமெண்டரி பாடசாலைகள் கிராமாந்திரங்களில் மூடப்பட்டுவிட்டன. அந்தக் கிரா மங்களிலெல்லாம், எந்த ஜில்லாபோர்டோ, பஞ்சாயத்தோ, அல்லது அரசாங்கமோ எத்தகைய பாடசாலைகளையும் ஏற்படுத்தவில்லை.

சுமார் 7 கோடி ரூபாய் நமது அரசாங்கம் ஆரம்பப் பாடசாலை களுக்காகச் செலவிடுகிறது. அதில் சுமார் 5 கோடி ரூபாய் பெரும் பாலும், எயிடட் எலிமெண்டரி பாடசாலைகளுக்குக் கிராண்டாகக் கொடுக்கப்படுகிறது. சுருங்கக் கூறுமிடத்து, இந்த நாட்டில் கல்வி

வளர்ச்சிக்குப் பெரும்பாலும் பாடு படுவது எயிடெட் எலிமெண்டரி பாடசாலைகளே என்பது வெள்ளிடைமலை.

சுமார் 50 கோடி ரூபாய் வசூல் செய்யும் அரசாங்கம், எயிடட் பாடசாலை ஆரம்பாசிரியர்களுக்கு மாதம் ரூ. 5 உயர்த்தி, ரூபாய் 1 கோடி எயிடட் பாடசாலைகளுக்காகச் செலவு செய்ய மனமில்லாத அரசாங்கம், எயிடட் பாடசாலைகளை ஒடுக்கும் முறையில் சட்டதிட்டங்களைத் தீட்டுவதும், மாதாந்திரக் கணக்குகளையும், அனாவசியமான குறிப்புகளையும் கேட்டு, துன்புறுத்துவதும் ஆரம்பக்கல்வி வளர்ச்சிக்கு அரசாங்கம் முட்டுக் கட்டை போடுவதாகும்.

தற்போதுள்ள தலைமை ஆசிரியர்களுக்கு, பாடசாலை திறந்ததும் டிப்டி இன்ஸ்பெக்டர்களும், மற்றக் கல்வி அதிகாரிகளும் கேட்கும் குறிப்புக்களையும், மாதாந்திரக் கணக்கு, பிராவிடண்ட் பண்டு, சென்ஸஸ் போன்றவைகளினால் ஏற்படும் கடிதப்போக்குவரத்து விஷயங்களைக் கவனிக்கவே ஒரு தலைமையாசிரியரின் பெரும்பாலான காலம் வீணாக்கப்படுகிறது. அவர் ஒரு குமாஸ்தாவாக மாற்றப் படுகின்றார். ஒரு தலைமை ஆசிரியர் திறம்பட பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்கான பல வேலைகளைச் செய்ய முடியாமலிருக்கின்றது. அப்படியிருக்க இன்று மறுபடியும் பிரதி தினம் பிள்ளைகள் கொடுக்கும் சம்பளங்களையோ, அதற்கு வேண்டிய ரசீதுகளை ஏற்படுத்தியோ, செலவினங்களுக்கெல்லாம் நகல்களை ஏற்படுத்தி பிரதி தினமும் அதற்கெல்லாம் கணக்குகளை எழுதிவைக்க வேண்டுமென்றால், இப்பொழுதுள்ள தலைமை ஆசிரியர், அப்பாடசாலையின் நிரந்தர குமாஸ்தாவாக மாறவேண்டும். அல்லது சம்பளம் கொடுத்து ஒரு குமாஸ்தாவை வைத்துக்கொள்ள வேண்டும். அதற்கு, அரசாங்கத்தார் ஒவ்வொரு பாடசாலைக்கும் ஒரு குமாஸ்தா சம்பளத்தைக் கொடுக்க ஏற்பாடு செய்தால், மாதாந்திர வரவு செலவு கணக்கு மட்டுமல்ல, தினசரி வரவு செலவு கணக்கு எழுதி வாரத்திற்கு ஒரு முறை அனுப்பச் சொன்னாலும் அனுப்பலாம். இதைக் கல்வி அதிகாரிகள், அரசாங்கத்திற்குச் சிபாரிசு செய்வார்களா?

இந்த விஷயத்தைப்பற்றி சென்னை மாகாண ஆசிரிய மானேஜர்கள், மானேஜர்கள் சங்கத்தின் முக்கியஸ்தர்களும், சென்னை ஜில்லா, சங்கத்தின் முக்கியஸ்தர்களும், கல்வியிலாகா டைரக்டரை பேட்டி கண்டு ஆவன செய்வார்கள். ஆங்காங்குள்ள, மானேஜர்கள் சங்கத்தார் மாதந்தோறும் வரவு செலவு கணக்கு அனுப்பும் முறை சரியான முறை அல்ல என்றும், அதை உடனே ரத்து செய்ய வேண்டுமென்றும், சென்னை கல்வியிலாகா டிபுடி டைரக்டர் (Elementary Education) அவர்களுக்கும், ஜில்லா கல்வி அதிகாரிகளுக்கும், மனுக்களை அனுப்பி, அதில் ஒரு நகலை சென்னை, ஆரம்பக் கல்வி ஆபீசுக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

புத்தகம் வைத்துள்ள தலைமையாசிரியர்களுக்கு ஓர் வேண்டுகோள்

நமது பாட புத்தகங்களை வைத்துள்ள எயிடட், பஞ்சாயித்து, ஆரம்பப் பாடசாலைகளுக்கு நமது ஆரம்பக்கல்விப் பத்திரிகையை இனமாக அனுப்பிக்கொண்டு வருகின்றோம். சென்னை அலுவலகத்திலிருந்து நேரடியாக புத்தகங்களை வரவழைத்துக்கொண்ட பாடசாலைகளின் பெயர்களையெல்லாம் ரிஜிஸ்டர் செய்திருக்கின்றோம். ஆனால் சிலர் ஆங்காங்குள்ள புத்தகக் கம்பெனிகளில், புத்தகங்களை வாங்கியிருக்கின்றார்கள். புத்தகங்களை வாங்கின ரசீதுகளை இன்னும் சிலர் அனுப்பாமலிருக்கின்றார்கள். உடனடியாக புத்தகங்கள் வாங்கிய ரசீதுகளை, புத்தக வியாபாரிகளிடத்திலிருந்து சீக்கிரம் வாங்கி அனுப்பும்படி தலைமை ஆசிரியர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றோம். ஒவ்வொரு பாடசாலைக்கும் ஒரு பத்திரிகைதான் அனுப்பப்படும்.

குறிப்பிட்ட பாடசாலையில் நமது பாடபுத்தகங்கள் வைக்கப்பட்டு, அப்பாடசாலைக்குப் பத்திரிகை வரவில்லையென்றால், உடனடியாக சென்னை அலுவலகத்தில் புத்தகங்கள் வாங்கியிருந்தால், வாங்கின பில்லின் நெம்பரும், தேதியையும், குறித்து அனுப்பவும். புத்தக வியாபாரிகளிடத்தில் வாங்கியிருந்தால், அப்புத்தக வியாபாரிகளிடமிருந்து வாங்கின ரசீதை அனுப்பிவைக்கவும். அப்பொழுதுதான் ஒழுங்காக, குறிப்பிட்ட பாடசாலைக்கு பத்திரிகையை அனுப்ப இயலும்.

மாதிரிப் பிரதிகள்

புத்தகம் புதிதாக வைக்கப்படும் முதல் ஆண்டில், பாடசாலைத் தலைமை ஆசிரியர் மாதிரிக் காப்பிகள் அனுப்ப ரூ. 3 அனுப்புவதும், அதற்கு மாதிரிப் பிரதிகள் அலுவலகத்திலிருந்து அனுப்பவேண்டியதும் நியாயமும், ஒழுங்குமாகும். ஆனால், பிரதி வருடமும், எல்லாப் புத்தகங்களையும் அனுப்பும்படி ரூ. 3 அனுப்பி, மாதிரிப் பிரதிகளை அனுப்பும்படி கேட்பது அர்த்தமற்ற முறையாகும். குறிப்பிட்ட பாட புத்தகங்களை வேண்டுமானால், மாதிரி அனுப்பும்படி கேட்பது நியாயமும், ஒழுங்குமாகும். ஒரு செட் 23 பாடபுத்தகங்களை அனுப்புவதானால் அதன் கிரயம் ரூ. 9 ஆகின்றது. வருடா வருடம் எல்லாப் பாடசாலைகளுக்கும் நூற்றுக் கணக்கான செட்டுகள் அனுப்பப்படுமானால், அலுவலகத்தில் நஷ்டம் ஏற்பட வழி உண்டாகுமே ஒழிய லாபம் கிடைக்காது. இதை நமது ஆரம்பாசிரியத் தோழர்கள் அறிய வேண்டும். அது மட்டுமல்ல, சில பாடசாலைகளில் தலைமை ஆசிரியர் மாதிரிப் பிரதிக்காக ரூ. 3 அனுப்புவதோடல்லாமல், அதே பாடசாலையில், சில ஆசிரியர்களும்

45-ம் பக்கம் பார்க்க

சட்டசபையில் ஆரம்பக்கல்வி

29 MAY 1955
MADRAS

மாகாணத்தில் உள்ள 113 லட்சம் குழந்தைகளில் 71 லட்சம் பேருக்குப் படிப்பில்லை

சென்னை அசெம்பிளியில்கல்வி இலாகா செலவு கோரிக்கையின் பேரில் நடந்த விவாதத்துக்கு கல்வி மந்திரி எம். வி. கிருஷ்ணாராவ் இன்று பதிலளித்துப் பேசினார்.

பள்ளிக்கூட பாட புத்தகங்கள் காலா காலத்தில் மாணவர்களுக்குக் கிடைக்கச் செய்ய தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும், பரீட்சை முடிவுகளை காலதாமதமின்றி வெளியிட ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் மந்திரி உறுதி அளித்தார்.

காலேஜ்களில் இட நெருக்கடியைத் தவிர்ப்பதற்காக காலேஜ்களில் மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்துவது பற்றி அரசாங்கம் ஆலோசித்து வருவதாகவும் மந்திரி கூறினார்.

மந்திரி மேலும் கூறியதாவது: கல்வி இலாகாவில் சீர்திருத்தமும் அபிவிருத்தியும் செய்ய குறிப்பிட்ட திட்டங்களை இன்னும் வகுக்க முடியவில்லை. கல்வித்துறையில் ஈடுபட்ட நிபுணர்களைக் கொண்டும், கல்வி அபிவிருத்தியில் அக்கறை கொண்டுள்ள சட்டசபை அங்கத்தினர்களையும், வெளியாரையும் கொண்டும் இவ்வேலையைச் செய்யவேண்டும். இதற்குச் சிறிதுகாலம் பிடிக்கும்.

1946-ம் வருஷத்திலிருந்து கல்விச் செலவு அதிகரித்து வருகிறது. 1946-ம் வருஷத்தில் கல்வி இலாகா செலவுகளுக்காக 460 லட்சரூபாய்கோரப்பட்டது. தற்போது கிட்டத்தட்ட 12-கோடியாக உயர்ந்துள்ளது.

என். ஜி. ஓக்கள், வாத்தியார்கள் ஆகியவர்களின் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி வசதிக்காக 50 லட்ச ரூபாய் செலவழிக்கப் பட்ஜெட்டில் வழி செய்யப்பட்டுள்ளது. அரசியல் திட்டத்தில் கூறியுள்ளபடி 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கெல்லாம் கட்டாய ஆரம்பக் கல்விக்கு வசதியளிக்க வேண்டுமென்பதே சர்க்காரின் கொள்கையாகும். இது விஷயத்தில் எக் கட்சியினருக்கும் மாறுபட்ட அபிப்பிராயம் இருக்காது.

பள்ளிக்கூடம் போகும் குழந்தைகளின் எண்ணிக்கை 113லட்சம் என்று சர்க்கார் புள்ளி விவரங்களிலிருந்து தெரியவருகிறது. இதில் 71 லட்சம் குழந்தைகள் படிக்காமல் இருக்கிறார்கள். இவர்களுக்குக் கல்வி போதிக்கப்பட வேண்டுமென்று கணக்கிடப்பட்டுள்ளது.

மேற்சொன்ன 71 லட்சம் குழந்தைகளுக்கும் பத்து வருஷத்திற்குள்ளாகக்கல்விபோதிக்க வருஷமொன்றுக்கு ரூ. 147 லட்சம் வீதம் வருஷா வருஷம் அதிகரித்து முடிவில் பத்தாவது வருஷத்தில் 1,170 லட்சம் ரூபாய் செலவாகுமென்று மதிப்பிடப் பட்டுள்ளது.

ஆரம்பக் கல்விக்காக சென்ற வருஷம் 708 லட்ச ரூபாய் செலவிடப்பட்டது 1952-53 வருஷ பட்ஜெட்டில் 715 லட்ச ரூபாய் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 500-க்கு மேற்பட்ட ஜனத்தொகையுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் ஆரம்பப் பள்ளிக்கூடம் நிறுவப்பட வேண்டுமென்பதே சர்க்காரின் நோக்கம்.

1946-47ல் மொத்தம் 36,148 ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் இருந்தன. தற்போது (1951-52-ல்) 38,000ஆக உயர்ந்துள்ள போதிலும் மொத்தச் செலவு மட்டும் கிட்டத்தட்ட இரண்டுமடங்காக அதிகரித்துள்ளது.

பிற்பட்ட வகுப்பினர்

பிற்பட்ட வகுப்பினர்களுக்கு தொழில் கல்லூரிகளில் 40 சதவிகித ஸ்தானங்கள் ஒதுக்க வழி செய்யப்பட்டுள்ளன. கல்வி அபிவிருத்திக்காகப்பாடுபடுவதே சர்க்காரின் கொள்கை. கல்வி இலாகா புனர் நிர்மாணம் செய்யப்பட்டு, கல்வி முறையில் உருப்படியான சீர்திருத்தமும் அபிவிருத்திகளும் செய்யப்பட வேண்டும்.

வேலையும் பாடமும்

கிராமங்களிலுள்ள ஏழைமக்களின் குழந்தைகள் பள்ளிக்கூடங்களுக்கு வருவதில் அதிக அக்கறை காட்டுவதில்லை. பள்ளிக்கூடத்திற்கு செல்வதின்மூலம் பெற்றோர்களுக்குப் பாரமாக இருப்பதைவிட வேலைசெய்து பிழைக்க அக் குழந்தைகளை அனுப்பிவிடுகிறார்கள். ஆகவே, ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் ஏழைக் குழந்தைகள் சேர்ந்து படிக்க வசதி 'ஷிப்டு முறை' ஏற்படுத்துவது பற்றி சர்க்கார் யோசித்து வருகின்றனர். இப்படிச் செய்வதால் ஒரு வேளை பள்ளிக்கூடத்திற்குச் சென்றும் மறுவேளை வேலை செய்தும் வரலாம். ஆரம்பப் பள்ளிக்கூடங்களிலேயே தோட்டவேலை சிறு கைத்தொழில்கள் உழவுத்தொழில் போன்றவைகளும் ஏற்படுத்த ஆலோசிக்கப் பட்டு வருகிறது.

ஹைஸ்கூல்கள்

1949-ல் மொத்தம் 899 ஹைஸ்கூல்கள் இருந்தன. அவ் வருஷம் 5,353 மாணவர்கள் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சைக்குச் சென்றனர். 1952-ல் 1,600ஹைஸ்கூல்கள் உள்ளன. இந்த வருஷத்தில் 80,000 மாணவர்கள் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சைக்குச் சென்றனர். ஹைஸ்கூல் கல்வி அபிவிருத்திக்குப் போதிய நிதியும், அனுபவம் வாய்ந்த நபர்களும் கிடைக்காததாலேயே மேற்கொண்டு ஒன்றும் செய்ய முடியாத நிலையிலிருக்கிறோம்.

முதியோர் கல்வி

1949—50-ல் சுமார் இரண்டு லட்ச ரூபாய் முதியோர் கல்விக்காகச் செலவிடப்பட்டு வந்தது. 1951-52-ல் ஐந்தரை லட்ச ரூபாய் செலவிடப்பட்டது.

அடிப்படைக் கல்விக்கும், ஆரம்பக் கல்விக்கும் அதிகத் தொகை செலவிட வருமானத்தைப் பெருக்க வழிவகை செய்வதே சர்க்காரின் முதல் பிரச்னை. தனிப்பட்ட நபர்களும், ஸ்தல ஸ்தாபனங்களும் கல்வி அபிவிருத்திக்குச் செய்யவேண்டிய வேலைகளையும், வருமானத்தைப் பெருக்கும் வழியைத் தேடவும் முயலவேண்டும். கட்டாய ஆரம்பக் கல்விக்காக மத்திய சர்க்காரிடமிருந்து எந்தவிதமான உதவி கிடைக்குமென்பதையும், அதைப் பயன்படுத்திக்கொள்ளும் முறையையும் கண்டுபிடிக்க வேண்டும்.

வாத்தியார்கள் சம்பளம்

மேலும் வாத்தியார்களின் சம்பள விஷயம்பற்றி ஆலோசிக்கக் குறிப்பாக சர்க்கார் உதவி பெறும் பள்ளிக்கூடங்களிலும், ஸ்தல ஸ்தாபனங்களிலும் வேலை செய்யும் ஆசிரியர்கள் சம்பள உயர்வுக்கு வழி செய்தாக வேண்டும். இது விஷயத்தில் சர்க்கார் பல துறைகளிலும் ஆராய்ந்து ஓர் முடிவிற்கு வருவர்.

ஆசிரியர்களுக்குச் சம்பளஉயர்வளித்த வகையிலேயே கல்வி இலாகா செலவு உயர்ந்துள்ளது. எலிமெண்டரி பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கு பிராவிடண்ட்பண்டுடன் கூடிய இன்ஷியூரன்ஸ் நிதி திட்டம் ஏற்படுத்தும் விஷயம் குறித்து சர்க்கார் ஆலோசித்து வருகின்றனர்.

விவாதம்

சென்னை, ஜூலை. 20—கல்வி மானியக் கோரிக்கைமீது இன்று காலை அசெம்பிளியில் தொடர்ந்து விவாதம் நடைபெற்றது. உதவி சபாநாயகர் தலைமைவகித்தார்.

வி. ஆர். நாகராஜன் (ஐ. மு.) பேசுகையில் ஆசிரியர்களின் சம்பள விஷயத்தில் வித்தியாசமிருக்கக் கூடாதென்றார். ஆசிரியர்களுக்குப் போதிய சம்பளமளிக்கப்பட வேண்டுமென்று சொன்னார். பிற்பட்ட வகுப்பினர்களுக்குக் கல்வி வசதி அதிகரிக்கப்பட வேண்டுமென்றார்.

பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் பரீட்சையில் தவறினால் அவர்களுக்கு உபகாரச் சம்பளம் அளிக்கப்படுவது நிறுத்தப்படக்கூடாதெனவும், வி. ஆர். நாகராஜன் கூறினார். பாலகிருஷ்ண சேர்வை (சுயேச்சை, பேசுகையில், புதுக்கோட்டை சென்னை மாகாணத்துடன் சேர்ந்தபிறகு கல்வியில் முன்னேற்றமேற்படவில்லை எனவும், அதற்கு முன்பு புதுக்கோட்டையில் 40 கட்டாயக்கல்வி நிலையங்கள் இருந்தன என்றும் கூறினார்.

பி. வி. சிவய்யா (ஐ. மு. ஆந்திரா) பேசுகையில் தேச விரோத புஸ்தகங்களெல்லாம் பாட புஸ்

தகங்களாக வைக்க அனுமதிக்கப் படுகின்றன என்று கூறினார். தாய் பாஷைகளிலேயே கல்வி போதனை செய்யப்பட வேண்டு மென்று சொன்னார்.

கோபாலமேனன் (காங்கிரஸ்) பேசுகையில் பள்ளிக்கூட கட்டிடங்களுக்காகவும், உயர்ந்த ரக மேஜை நாற்காலிகளுக்காகவும் பணம் விரயம் செய்யப்படுவதைக் கொண்டு அநேக புதிய பள்ளிக் கூடங்களைத் திறக்கலாமென்று கூறினார்.

சித்தி சாகிப் (முஸ்லிம் லீக்) பேசுகையில் கல்வித் துறையில் எதிர்பார்த்த அளவிற்கு முன்னேற்றமும் அபிவிருத்தியும் ஏற்படவில்லை என்றார்.

அய்யாறு (ஐ. மு.) பேசுகையில் அதிகப்படியான ஹைஸ்கூல்கள் திறக்கப்பட வேண்டுமென்று சொன்னார்.

கே. ஆர். விசுவநாதன் (ஐ.மு) பேசுகையில் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கெல்லாம் கட்டாய ஆரம்பக் கல்வியளிக்கப்பட வேண்டுமென்றும், இது இலவச போதனையாக இருக்க வேண்டுமெனவும் சொன்னார்.

முனிரெட்டி (ரங்கா கட்சி) பேசுகையில் ஒவ்வொரு தாலூகாவிற்கும் ஒரு மாணவர் விடுதி வீதம் திறக்கப்பட வேண்டுமென்றார்.

கே. வி. ராமசாமி (ஐ. மு.) ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளத்தைக் கொண்டு நியாயமான வாழ்க்கை நடத்த முடியாதென்றார். சம்பள விகிதம் உடனடியாக உயர்த்தப்பட வேண்டுமென்று அவர் கூறினார். தேர்தலில் போட்டியிடவும், சங்கம் வைத்துக்கொள்ளவும் ஆசிரியர்களுக்கு உரிமையளிக்க வேண்டுமென்றார். ஆரம்ப ஆசிரியர்களுக்கும் மேல்சபையில் பிரதிநிதித்வம் அளிக்கப்பட வேண்டுமென்று அவர் கோரினார்.

ஒய். ஆதிநாராயண ரெட்டி (ஐ. மு. ஆந்திரா) பேசுகையில் காலேஜ்களில் மாணவர்களுக்கு இடம் கிடைப்பதிலுள்ள சிரமங்களை விளக்கினார்.

அவர் கூறியதாவது:—

பரீட்சையில் தேறியதற்காக ஒரு மாணவனுடைய தகப்பனார் அம்மாணவனுக்குப் பேனா வாங்கிக் கொடுத்தார். பரீட்சையில் தேறாத மாணவனொருவனுடைய தகப்பனார் அவன் பரீட்சையில் தேறாததால் காலேஜ் அட்மிஷனுக்காக அலையவேண்டாமென்ற சந்தோஷத்தில் தன் மகனுக்கு ஒரு சைக்கிள் வாங்கிக்கொடுத்தாராம்.

இந்த விதமான நிலையில் கல்வித் துறையில் எவ்வாறு முன்னேற்றம் ஏற்பட முடியும்?

ஆசிரியர்கள் வாழ முடியுமா?

(எஸ். ஜி. வாமனமூர்த்தி, ஆசிரியர், ஆரியகலா வித்யாசாலை,
எமனேஸ்வரம், P. O., (Via) பரமக்குடி S. I. R.)

"நாங்கள் வாழப் பிறந்தோமா, அல்லது மாளப் பிறந்தோமா?" என்ற தீனக்குரல் எழுப்புகிறது இன்றைய ஆசிரியர் சமுதாயம். வாழ முடியாது மாளப்போகின்ற ஆசிரியர்களின் வேதனைக் குரல் இது. வாழப் பிறந்தவர்கள்; மக்கள் மன்றத்திலே மதிப்புடன் வாழ வேண்டியவர்கள்; பிறர் வாழ வழி கற்பிக்கின்றவர்கள், வாழ முடிகிறதா என்றால் இல்லவே இல்லை! ஆசிரியர்களின் அவல நிலையை ஊராள வந்தார் உணர வேண்டுமென்பதற்காகவே, ஆசிரியர்களில் ஒருவரான நான் இந்தக் கட்டுரையை வரைகின்றேன்.

"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்" எனப் போற்றுகிறது ஒரு பழந்தமிழ் நூல். ஏகலைவன் தன்னுடைய குரு துரோணாச்சாரியாருக்குக் கட்டை விரலைக் காணிக்கையாக அளித்த வரலாற்றுக் கதை, நமக்குப் பண்டைய பாரதத்தில் ஆசிரியர்களது அந்தஸ்தை அறிவிக்கிறது. இந்தியக் குடியரசின் ஜனாதிபதி டாக்டர் ராஜேந்திர பிரசாத் அவர்களும் ஆசிரியர்களை வானளாவப் புகழ்கிறார். கடந்த பொதுத் தேர்தலில் மக்களால் புறக்கணிக்கப்பட்டு, படுதோல்வியடைந்த மாஜி கல்வி மந்திரி மாதவமேனன்கூட நம்மை உயர்த்தித்தான் பேசியிருக்கிறார். ஏதோ ஒரு சிலரைத் தவிர. உயர்ந்த பண்பாடுடையோர் அனைவரும் ஆசிரியர்களைப்பற்றி கௌரவமாகப் பேசுகின்றனர்.

ஆசிரியர்களுக்கு அளிக்கப்படுகின்ற புகழுரைகளை நடைமுறையில் இருக்கின்ற செயலமைப்புக்கு ஒப்பிட்டுப் பார்த்தால், அளிக்கப்படுகின்ற புகழுரைகள்; வாரி வழங்கப்படுகின்ற வாழ்த்துச் சொற்கள்; அள்ளி வீசப்படுகின்ற அனுதாப வேண்டுகோள் அனைத்தும் உள்ளன்புடனே உரைக்கப்படுகின்றதா, அல்லது, வேடம்புனைந்த கபடதாரிகளின் வெறும் பாவனைச் சொற்களா? என்று சந்தேகப்பட வேண்டியதாயிருக்கிறது. ஆசிரியர்களின் உண்மை நிலையைப் பார்த்தால் இவர்கள் கூறுகின்றவை அனைத்தும், துரோகிகள் உயிருடனேயே தியாகியை குழிதோண்டிப் புதைத்துவிட்டு, அந்தப் பிணக்குழி முன்பாக அவனைப் பற்றிபபுகழ்ந்துபாடுகின்றபுகழ்ப் பாமாலைகளைப்போல் காட்சியளிக்கின்றது.

நமது நாடு குடியரசு நாடு; ஜனநாயக நாடு; பூரண சுதந்திரம் பொலிந்து விளங்கும் நன்னாடு. ஜனநாயகம் சரிவர நடைபெற வேண்டுமானால், நாட்டு மக்க

ளனைவரும் கல்வியறிவுடையவரா யிருத்தல் வேண்டும்; இல்லா விடில் ஜனநாயகம் வெற்றிபெற முடியாது, என்பது சோஷலிஸ சித்தாந்தத்தின் அடிப்படைத் தத்துவம். சுமார் நூற்றுக்கு எண்பது சதவீதத்துக்குமேல் படிக்காத பாமர பாட்டாளிகளைக் கொண்ட இந்த நாட்டிலோ, ஜனநாயகம் வெற்றி பெற்றுவிட்டது என்று நாட்டின் மாபெருந் தலைவர்கள் எனப்படுபவர்களில் சிலர் கூறுகிறார்கள். இதைப்பற்றி விவாதிப்பது இந்தக் கட்டுரையின் நோக்கமல்ல. ஆகையால் இதை விட்டுவிடுகிறேன்.

"கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினாற், கைகொட்டிச் சிரியாரோ" என்றார் பாரதியார். குருடனுக்கு அளிக்கப்பட்ட சித்திரம் வரையப்பட்ட அட்டை, பேச முடியாத ஊமைக்கு அளிக்கப்பட்ட பேச்சுரிமை போலத் தான் பெரும்பாலான இந்திய மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குரிமை. ஓட்டுரிமை; ஜனநாயகம்; எதிர்க்கட்சியின் அவசியம்—இவைகளில் எதைப்பற்றி அவனுக்குத் தெரியும்? இவர்கள் வழங்குகின்ற வாக்குரிமைச் சீட்டிலே—ஜாதி வெறி, பணவெறி கட்சி பேதம் நிறைந்த இந்த நாட்டிலே—ஜனநாயகம் இருக்க முடியுமா? நாட்டில் அரசியல் நேர்மையாக நடக்க வேண்டுமென்றால், நாட்டு மக்களுக்குக் கல்வியறிவு அவசியம் அளிக்க வேண்டும்; அளிக்கப்படத்தான் வேண்டும்.

இந்த நாட்டிலே உணவுப் பஞ்சம் கோர நர்த்தனம் புரிந்த தென்றால், உடைப் பஞ்சம் பேயாட்டம் ஆடினதென்றால் அதற்கு மூலகாரணம் ஒன்றே ஒன்றுதான். ஆட்சிப் பீடத்திலே அமர்ந்த ஆட்சியாளர்களுக்கு மூளைப்பஞ்சம் இருந்தது; திறமைப் பஞ்சம் இருந்தது; நேர்மைப் பஞ்சம் இருந்தது; அடக்கப் பஞ்சம் இருந்தது. இப்படிப் பட்டவர்கள் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்து ஆட்சிபுரிய நேர்ந்ததற்குக் காரணம் மக்களிடத்திலே கல்விப் பஞ்சம் இருந்தது. பொது மக்கள் அரசியலறிவு இல்லாததால், பல அட்டூழியங்களுக்கும் அவதிகளுக்கும் உள்ளானார்கள். இவ்வளவு சக்தி வாய்ந்தது கல்வி என்றால், அதனை அனைவருக்கும் அள்ளிக் கொடுக்கும் ஆசிரியர்கள் எவ்வளவு சக்தி வாய்ந்தவர்கள் என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும்!

ஆகவே, நாட்டின் வருங்காலம் ஆசிரியர்களைப் பொறுத்து இருக்கிறது. இதனை அனைவரும் உணரவேண்டும். இவ்வளவு அத்தியாவசியமான ஆசிரியர்களின் நிலை என்ன? உபாத்தியாயர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற ஊதியம், அவர்களுடைய உணவுத் தேவையைக்கூடப் பூர்த்தி செய்யப் போதுமானதாக இல்லை. சட்டம் அவர்களை நடத்துகின்ற விதம் இன்றைய சமுதாய அமைப்பிலே மதிப்புத் தருவதாக இல்லை. கல்வி ஞானமற்ற பொது மக்கள், ஆசிரியர்களு

டைய அவசரத் தேவையை யுணர்ந்துகொண்டு, ஆதரவு தரும் நிலையில் இல்லை. ஆம்! ஆசிரியர்களுக்கு உழைப்புக் கேற்ற ஊதியமில்லை; அறிவிற் கேற்ற அந்தஸ்து இல்லை; மக்கள் மதிப்பளிக்கக் கூடிய அதிகாரமோ, செல்வாக்கோ இல்லை. சாதாரண வாழ்க்கை வசதிகளுடன், மக்கள் மன்றத்திலே மதிப்புடன் வாழ்க்கை நடத்தக்கூட சர்க்கார் வழி செய்யவில்லை.

சிலர், "கல்வியின் தரம் குறைந்துவிட்டது" என்று கவலைப்படுகின்றனர். இது ஆசிரியர்கள்பால் ஆதரவுகொண்ட மக்களை ஏமாற்றச் செய்யப்படும் மோசடி வித்தை. அவர்களை, "கவலையற்ற ஆசிரியர்களால்தான் ஜீவனுள்ள கல்வியைப் போதிக்க முடியும்" என்ற அறிஞர்கள் கூற்றை ஆராயுமாறு வேண்டிக் கொள்கிறேன். வாழ்க்கையே வறண்ட பாலைவனமாகி, வறுமையில் வாடிக் கொண்டிருக்கும் ஆசிரியர்களை, தினந்தோறும் கவலைத் தொகுதிகள், அரித்து அரித்துத் தின்றுகொண்டிருக்கின்றன. அவர்களை, ஜீவனுள்ள கல்வியை அளிக்கும்படியான நிலைமையில் வைக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை.

"எல்லோரும் அடையும் துன்பத்தில் ஆசிரியர்களும் பங்கு கொள்ளவேண்டும். நாட்டின் வறுமை நிலைதான் இதற்குக் காரணம்" என்று அரசியலார் கொண்டிச் சமாதானம் கூறலாம். இவ்வாறு சொல்லுபவர்கள், ஏழைகளுக்காகத் தங்களுடைய சொத்துக்களை துறந்தவர்களல்ல என்பதையும், அல்லது, தங்களுடைய சம்பளத்தையோ, அலவன்சுகளையோ பெற்றுக் கொள்ளாது, சுகத்தை தியாகம் செய்து விட்டவர்களல்ல என்பதையும் உணரவேண்டும்.

ஒருவன் எஸ். எஸ். எல். ஸி. பாஸ் செய்து பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பாஸ் செய்தால், சென்னை அரசாங்கத்தில் 45 ரூபாய் சம்பளம் ஆரம்பிக்கிறார்கள். அதே வாலிபன் எஸ். எஸ். எல். ஸி. பாஸ் செய்து இரண்டு வருடங்கள் போதனை முறைப் பயிற்சி பயின்று பாஸ் செய்தால், அவனுக்கு 40 ரூபாய் சம்பளம் ஆரம்பிக்கிறார்கள். இதைப்போல் இன்னும் எத்தனையோ பல! இது எதைக் காட்டுகிறது? நீதியையா? நேர்மையையா? நியாயத்தையா? ராமராஜ்யம் இவ்வாறுதான் இருக்குமா? அது மாத்திரமல்லாமல், ஆசிரியர்களுக்குப் பேச்சுரிமை; எழுத்துரிமையை மறுத்து வாயில்லாப் பூச்சிகளாக்கி வைத்திருக்கிறது.

அரசாங்கம் ஆசிரியர்களை அலட்சியம் செய்வதை விட்டுவிட்டு, அனுதாபத்துடன் நடந்து கொள்ளவேண்டும். ஏழையின் கண்ணீர் எரிமலையைக் காட்டிலும் பயங்கரமானது. ஆச்சாரியார் ஆட்சியில் எப்படி ஆசிரியர்

(16—ஆம் பக்கம் பார்க்க)

ஹையர் எலிமெண்டரி பள்ளிகளின் அவதி

(N. வெங்கடாசலம், தலைவர், திருச்செந்தூர் தாலுகா ஆரம்ப ஆசிரியர் யூனியன், குலசேகரன் பட்டினம்.)

சில ஆண்டுகளாக அரசாங்கத்தார் ஹையர் எலிமெண்டரி பள்ளிகளை நிர்வகிக்கும் முறையைக் கவனித்தால், வேண்டா வெறுப்பாக நடத்தும் விதம் தெரியவரும். அதன் காரணமாக ஆசிரியர்களும், மாணவர்களும் படும் துயரம் சொல்லத் தரமன்று. ஜூனின் மாத ஆரம்பத்திலேயே எட்டாவது வகுப்பு பரீட்சை முடிவுகள் அறிவிக்கப் பட வேண்டும் என்ற முறை இருந்தும், இவ்வாண்டு ஜூனின் 30உ வரை அனேக பள்ளிகளுக்கு முடிவு அறிவிக்கப்படவில்லை. தேறிய மாணவர்களும் ஹைஸ்கூல்களை அடைந்த பொழுது, Term days காணுது என்று சொல்லியோ, இடம் இல்லை என்று காரணம் காட்டியோ, நாலாவது பாரத்தில் சேர்க்க மறுக்கப்பட்டனர். தன்னுேடு இதே பாடசாலையில் கல்வி கற்று அரசாங்கப் பரீட்சைக்குப் பயந்து, சென்ற வருடமே ரிகார்டு ஷீட் பெற்று, பக்கத்திலுள்ள ஹைஸ்கூலில் மூன்றுவது பாரத்தில் சேர்ந்து 30% கூட வாங்கத் தகுதியற்றவன் ஹைஸ்கூல் தலைமையாசிரியரின் கடைக்கண் நோக்கால், இன்று நாலாவது பாரத்தில் கம்பீரமாக வீற்றிருக்கவும், அரசாங்கத்தாரின் கடும் சோதனைக்குள்ளாகி எல்லாப் பாடங்களிலும் 50% பெற்றும் நாலாவது பாரத்தில் இடம் பெறுமல் திகைக்கும் மாணவன், ஹையர் எலிமெண்டரி பள்ளிக்கூடத்தையும், ஷெ ஆசிரியர்களையும் சபியாது என்ன செய்வான். இக்காரணங்களால் ஹையர் எலிமெண்டரி பள்ளிகள் வளர்ச்சி குன்றி மறையும் தறுவாயிலிருக்கின்றன. அரசாங்கத்தார் தைரியமாக இவற்றை ஒழித்து, ஐந்தாவது வகுப்புவரை எலிமெண்டரி, அதற்குமேல் செகண்டரி என்று ஏற்பாடு செய்யவேண்டும். இல்

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் நடத்தப்படுகிறார்களோ, அதைப் பொறுத்துத்தான் அவருடைய அரசாங்கத்தின் பலமும் இருக்கும். மந்திரி மாதவ மேனன் மாஜி கல்வி மந்திரியானதே இதற்கு அத்தாட்சி. இதனை ஆச்சாரியார் நன்கு உணருவார் என்று நம்புகிறேன்.

நம்பிக்கையை நல்ல ஒத்துழைப்பாகப் பெற்றுக்கொள்ள வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு. அப்படியில்லையென்ருல் வாழ முடியாத ஆசிரியர்களில் — தன்மான முள்ளவர்கள்; வாழ விரும்புபவர்களின் கதி?

கின்றான். அவன் நன்மையைச் செய்யவும், தீமையை எதிர்க்கவும், துன்பத்தையும் துரதிருஷ்டத்தையும் தாங்கவும் வலிவுடையவனாக இருப்பான். கொலன்னாவிலுள்ள ஸ்டீபன் என்பவன் பிடிவாதக்காரர்களான கொலைகாரர்களிடையே சிக்கியபோது அவர்கள் கேலியாக "உன் கோட்டை எங்கே?" என்று கேட்டார்கள். மார்பின்மேல் கை வைத்து "இங்கேதான்" என்று தைரியமாகப் பதிலளித்தான் நேர்மைப் பண்பு சோதனைகாலத்திலேதான் சுடர் வீசி எழும். எவ்வகைச் சாதனங்களும் கைநழுவி விடும்போதும் அவன் தன் நேர்மையிலும் தைரியத்திலும் பிறழாமல் நிற்கிறான்.

லார்டு எர்ஸ்க்வன் என்பவர் தம் கொள்கைகளில் அசையாத உரிமை பூண்டவர். உண்மையின் உறுதிப் பிடியிலிருந்து விடுபடாதவர். அவர் எழுதிய ஒழுங்கு வழிகள் ஒவ்வொரு இளைஞனின் நெஞ்சத்திலும் பதிய வைக்கும் தகுதி வாய்ந்தவை. அவர் என் இளமையிலிருந்தே மனச்சாட்சி எது கடமை என்று உணர்த்துகிறதோ அதைச் செய்தலும், பலனைக் கடவுளிடத்தில் விடுதலும் முதலறிவுரையாக இருந்தது. இந்தப் பழக்கத்தை என் கல்லறைவரைக் கொண்டு செல்வதை நான் நம்புகிறேன். நான் இதுவரைக்கும் அதைப் பின்பற்றினேன். இந்தக் கொள்கைக்குக் கீழ்ப்படிவது ஒரு பிரத்யேகமான தியாகமென்று நான் கூறினால் அது பழிப்பதற்குக் காரணமில்லை. அதற்கெதிராக முன்னேற்றத்திற்கும் செல்வாக்கிற்கும் இது பாதை என்று கற்றுக் கொண்டேன்; என் பரம்பரை இதைப் பின்பற்றுமாறு குறிப்பிடுவேன்.

ஒவ்வொரு மனிதனும் உயர்ந்த பண்புடையவனாக இருப்பதை வாழ்க்கையின் உயர்ந்த நோக்கமாகக் கொள்ளவேண்டும். அதைத் தகுதியான முறைகளில் அடைவதற்கு முயற்சி செய்யலாகும். நம்மால் ஓரளவு அடைய முடியாமற் போனாலுங்கூட உயர்ந்த முறையில் வாழ்வதைப் பற்றி எண்ணவேண்டும். டிஸ்ரேலே என்பவர் உயர நோக்கவில்லையெனில் எவனும் தாழ்ந்த நிலையடைவான். எந்த உணர்ச்சி கிளர்ந்தெழவில்லையோ அந்த உணர்ச்சி கல்லறையிலுங்கூட அமிழ்ந்துசெல்லலாம் என்கிறார். ஜார்ஜ் ஹெர்பர்ட் என்பவர் அழகிய பாட்டாக உயர்ந்த அறிவுரையோடு ஒன்று எழுதுகிறார். உன் நடத்தையில் பண்புடையவனாகவும் திட்டங்களில் உயர்ந்தவனாகவுமிருக்கவேண்டும். உணர்ச்சி வெள்ளத்தில் அமிழ்ந்துவிடாதே. எவனொருவன் உயர்ந்த முறையில் வாழவும் எண்ணவும் கற்றுக் கொள்கிறானோ அவன் வாழ்க்கையில் ஒரு நோக்கமில்லாதவனைவிட உயர்ந்தவனாகவே வாழ்கின்றான். ஸ்காட்லாந்திய பழமொழி ஒன்று: பொற்குவியலைக்

கைப்பற்ற எண்ணினல் அதில் ஒரு சிறுபகுதியாகிலும் அடைவான் என்று கூறுகிறது.உயர்ந்த பயன்களுக்கு எவனொருவன் ஆசைப்படுகிறானோ அவன் தன் வாழ்வைத் தொடங்கிய காலத்திலிருந்து சிறிது அதிகமாகவே முன்னேறச்செய்வான். அவன் குறிவைத்த இடத்தை அடையாமற் போனாலுங்கூட தன்னை உயர்த்திக்கொள்ள வேண்டும் என்ற முயற்சியே நிலையான பலனைக் கொடுக்கும்.

கர்னல் சார்டரீஸ் என்பவர் யோக்கியதைக்காகப் புகழ்பெற்ற ஒருவனைப் பார்த்து நான் உன்னுடைய நல்லபெயருக்காக 1000 பவுன்கள் வழங்கவேண்டுமென்றார். அதைப் புரிந்துகொள்ள முடியாது ஏனென்றுகேட்டான். நான் அதைக்கொண்டு 10000 பவுன்கள் லாபமடைய முடியுமென்று விடை பகர்ந்தார்.

சொல்லிலும் செயலிலும் உள்ள நேர்மைதான் பண்புடைமையின் முதுகெலும்பு. தலைமையான அதன் அடையாளமாக இருப்பது உண்மையை மிக நம்பிக்கையுடன் கடைப்பிடிப்பதேயாகும். சர். ராபர்ட்பீல் என்பவர் இறந்த சில நாட்களுக்குப் பின் பொதுமக்கள் சபையில் அவரைப் பாராட்ட விரும்பிய வெல்லிங்டன் கோமகனார் "ராபர்ட் பீலின் கண்ணியமான பண்புடைமையை பிரபுக்களாகிய நீங்கள் உணரவேண்டும். மன்னரின் அரசியல் சபைகளில் நாங்களிருவரும் இருந்தோம். அவருடன் ஒப்பற்ற நட்புறவைக் கொண்டாடிய நான் எல்லாத் துறைகளிலும் அவரைப்போல் உண்மையிலும் நியாயத்திலும் நான் அதிகமாக நம்பிக்கை கொண்டிருந்த ஒரு மனிதனைக் கண்டதில்லை." என்றார்.

ஒரு அமெரிக்க கனவான் க்ரான்வில் ஷார்ப் என்பவரின் உயர்ந்த பண்புகளைப் பாராட்டுவதற்காகத் தன்னுடையமக்களில் ஒருவனுக்கு அவர் பெயரை வைத்தாகக் குறிப்பிட்டு அவருக்கு எழுதினர். அக் கடிதத்தைக் கண்ட அவர் "நீ யாருடைய பெயரை உம்மகனுக்கு வைத்தீரோ அவருக்கு அவருடைய குடும்பத்தின் பெயர்போன ஒரு கொள்கையைக் கற்றுக்கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். அது நீ எவ்வாறு தோன்ற வேண்டுமென்றுவிரும்புகிறாயோ அவ்வாறிருக்க முயற்சி செய் என்பதாம். இக் கொள்கையின் பாதையை என் தந்தை கூறியவாறு அக்கரையாகவும் பணிவாகவும் பின்பற்றினேன். அதனால் தான் சாதாரணமாகவும் யோக்கியமான மனிதனாகவும் பொது வாழ்விலும் தனித்த வாழ்விலும் ஒரு குறிப்பிடத்தக்க செய்தியாக மாறியது என்று எழுதினர். பொர்னார்டு என்பவர் அறிவு மிகுந்தவர். ஆனால் நேர்மையில்லா வழக்கறிஞர். அவரிடம் ஒரு தரம் கிராம்வெல் என்பவர் "நீர் உமது நடத்தையில் மிகவும் வேறுபாடுடையவராக நான்

உணர்கிறேன். இத்தகைய வாழ்வைப்பற்றி அதிகமாக தன்னம்பிக்கை வேண்டா. தந்திரம் உம்மை ஏமாற்றலாம்; ஆனால் நேர்மை உம்மை எப்போதும் ஏமாற்றாது" என்று குறிப்பிட்டார். யார் தம் சொற்களுக்கு வேறுபாடாக நடந்துகொள்கிறார்களோ அவர்கள் பெருமை பெறமாட்டார்கள். அவர்கள் சொற்களுக்குக் குறைவானமதிப்புத்தானிருக்கும். உண்மை உதடுகளில் மட்டுந்தான் நர்த்தனமாடும்.

உண்மைப் பண்பு மறைமுகமாகவோ வெளிப்படையாகவோ சரியாகவே நடைபெறுகின்றது. ஒரு இளைஞனை "அம்மரத்திலிருந்து சில கனிகளை ஏன் நீ கொண்டுவரக் கூடாது?" என்று ஒருவர் கேட்டார். இருவருக்கும் அங்கு ஒருவருமில்லையென்று தெரியும். இருந்தாலும் அவன "அங்கு ஒருவர் இருந்தார். நானே என்னைக் கண்காணிக்க இருந்தேன். யோக்கியதையற்ற ஒரு செயலைச் செய்வதற்கு என் மனச்சாட்சியின் முன்னாலேயே என்னால் செய்ய முடியவில்லை. இது வாழ்வை ஒழுங்குபடுத்தும் நடைமுறையிலுள்ள ஒரு ஆற்றல். நாளுக்குநாள் ஒவ்வொரு மணியிலும் இந்தத் திட்டம் பண்புடைமைக்கு மெருகு கொடுக்கிறது. அது ஒவ்வொரு விநாடியும் செய்முறைப் படுத்துகின்ற ஒரு சக்தியாகவும் விளங்குகின்றது. ஆட்சி செலுத்தக்கூடிய இத்தகைய அதிகாரத்தைவிட பண்புடைமைக்கு வேறு பாதுகாப்பு இல்லை. குற்றவாளியின் தவிர்க்க முடியாத நீதிபதி இதுவேயாகும்.

இவ்வாறெல்லாம் சாமுவெல்ஸ் மைல்ஸ் தம் கட்டுரையில் மிக அழகாகத் தெளிவுபடுத்துகிறார்.

அறிவுக் கதிர்

"அன்று எழுதிய எழுத்து" பலப்பல நாடுகளிலே அழித்தெழுதப்பட்டிருக்கிறது—அயனால் அல்ல—ஆற்றல் மிக்க வீரர்களால்! இயங்கும் விதி, விரைவில் ஒழியத்தான் போகிறது.

வாலிபர்கள் உரிமைப் போர்ப்படையின் ஈட்டி முனைகள்; நடமாடும் எஃகுக் கம்பிகள். அவர்கள் அகத்திலே ஆர்வமும், முகத்திலே வீரக்களையும், செயலிலே துடிதுடிப்பும் காணப்படும்.

தோழமை! ஆழ்ந்த கருத்துள்ள அழகான சிறு சொல். பேதம் நீங்கிய அல்லது நீக்கப்பட்ட நிலை அல்ல, பேதம் ஏற்படாத நிலை—ஏற்பட முடியாத நிலை. தோழமை!

"மங்கா ஓவியம்"

உயர்நிலைப்பள்ளிக் கதைப் போட்டியில் முதல் பரிசுபெற்ற கதை

எழுதியவர்: தி. க. அரங்கசாமி,
போர்டு உயர்நிலைப் பள்ளி, தருமபுரி, சேலம்.

"விதி என்ற சுழன்று வீசும் சூறாவளியில் சிக்கிச் சிறு துரும்பாகச் சுழல்கிறது உலகம். அதிலே ஆதரவற்ற அனாதையாக விளங்கிய அவளை அணங்குகளின் உள்ளத்தில் அழியாத ஓவிய மாக்கி விடுகிறது அந்த விதி!"

பொங்கி வரும் நீரினின்றும் கிளம்பிய அலைகள் ஒன்றன்பின் ஒன்றாக முன்னேறி வந்து கரையில் மோதிவிட்டுப் பின்னேறிச் சென்று கொண்டிருந்தன. அலையினின்றும் சிதறிய நீர்த்துளிகள் மாலை யிளம் வெயிலில் முத்துக்களைப் போன்று பள பளத்தன. இடையிடையே துள்ளுகின்ற மீன்களைப் பிடிக்க முயன்று தோல்வியடைந்து நிராசையுடன் நீரைப் பார்த்துக்கொண்டு கிடக்கும் நீர்ப் பறவைகளைப் பார்த்துச் சிரிப்பன போன்று அலறிக் கொண்டிருந்தன ஆந்தைகள்.

ஆற்றின் கரையோரமாக நீண்டு வளர்ந்திருந்த மரங்களின் இடையில் செல்லும் ஒற்றையடிப் பாதை வழியாகப் போய்க் கொண்டிருந்தது ஒரு கூட்டம். முன்னே சிலர் பிண ஒலிக்குறி குறியாய் ஒலிக்கும் பணியை அடித்துக்கொண்டு செல்ல அதன்பின் ஒரு பெண் குப்பல் குமுறிக்கொண்டு சென்றது. அதன் நடுவில் நன்றாக அலங்கரிக்கப்பட்டுக் கடைந்தெடுத்த தந்தச் சிலைபோன்ற பெண் ஒருத்தி—கணவனை இழந்து அவன் கட்டிய உரிமைப் பரிசையும் இழக்கச் சென்று கொண்டிருக்கும் விதவை—கண்ணனை தன் கணவன் காலன் வாயில் விழுந்து விட்டானே, கண்ணீரில் தானே கழிய வேண்டும் தன் வாழ்க்கை என்றெண்ணிக் கண்ணீர் விட்டுக் கதறுகின்றாள் எதிர்கால வாழ்வின் இருட்டறையை நோக்கி. இருட்டறை யில்லாமல் இன்ப வாழ்வையா வழங்கப் போகிறது இச் சமுதாயம்!

அக்கூட்டம் செழித்து வளர்ந்திருந்த தோப்பினுள் புகுந்தது. சாவு மணி அடித்தது. சடங்குகள் ஆரம்பமாயின. அவள் சுக வாழ்வைச் சுட்டுப் பொசுக்கும் சுலோகம் சுழன்றோடி வந்தது. அவளை வறண்ட பாலைவனத்தில் கொட்டித் தள்ளும் நெஞ்சழுத்தக் காரர்கள், உற்றார் எனப் பெயர் வைத்துக்கொண்டு அந்தப் பெண்ணின் வாழ்க்கைக்கே உலை வைக்கும் உலுத்தர்கள் நீலிக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தனர்.

அதையடுத்து ஆற்றுக்கு அவ்வணங்கை அழைத்துச் சென்றனர். அவள் அலறினாள். இதையெல்லாம் கண் இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்த மங்க

ளாவின் கண்கள் தாமாகவே மூடிக்கொண்டன. பெண்களின் புலம்பல் காற்றில் விட்டுவிட்டு மிதந்து வந்தது.

மறுபடியும் கண்களைத் திறந்த போது கலையிழந்து, கட்டிழந்து, வாழ்விழந்து வந்துகொண்டிருக்கும் வனிதையைத்தான் கண்டாள். மங்களா நீர் மல்கிய கண்களுடன் எதிரே நின்றிருந்த சுகுணாவைப் பார்த்தாள். இரண்டுதுளி கண்ணீர் தரையில் விழுந்து சிதறியது.

"சுகுணா……" அவள் குரல் தழுதழுத்தது.

"என்ன மங்களா…" என்று கேட்டாள் சுகுணா. அவளுக்கு மட்டும் இதயமில்லையா என்ன?

"சுகுணா …அப்பெண்ணின் கணவன் இறந்துவிட்டான். ஆயினும் தளிர் உடலை இழக்கவில்லை. தன் தாலியைத்தான் இழந்தாள் ……இளமையை இழந்து விடவில்லை. அவள் புது வாழ்வு பெற்று வாழ வழி செய்வதே என் இலட்சியம்…" என உறுதியுடன் கூவினாள்.

"அதுமட்டும் முடியாது மங்களா! அப்படி முயன்றாலும் சமூகம் உன்னைச் சும்மாவிடாது. சீறி உன் வாழ்வைச் சிதைத்து விடும்."

இதைக் கூறிவிட்டு லேசாக முறுவலித்தாள்.

"சுகுணா அதைப்பற்றி யெனக்குக் கவலையில்லை, உண்மையப்பு எடுத்துக் கூறிய எத்தனையோ பெரியார்களின் வாழ்வையே சிதைத்து விட்டது இச்சமுதாயம்! சீர்கெட்ட பிரான்சு நாட்டிலே சமத்துவத்தை நிலைநாட்ட முயன்ற நெப்போலியன் எப்படி மாண்டான்? அமெரிக்க நாட்டின் அடிமைத்தனத்திற்கு அழிவு மணியை அடித்து அமரத்துவத்தை நிலைநாட்ட முயன்ற அப்ராஹாம் லிங்கனின் காலம் எப்படி முடிந்தது? அகிம்சையினால் உலகை அன்பு வலையில் பிணிக்க முயன்று கொண்டிருந்த மகாத்மாவைக் கொன்றது யார்? தாய் நாட்டின் விடுதலைக்காகப் போராடி வறுமையை அணைத்து வாழ்விழந்த வ. உ. சிதம்பரனார் எப்படி உயிர் துறந்தார்? அப்படி இருக்க நான் ஏன் இச்சமுதாயத்தைக் கண்டு அஞ்சவேண்டும்! சில நாட்களுக்கு முன் எந்தச் சமுதாயம் அவளை எவனுக்கு மாலையிட வைத்து மணமகளாக்கி மகிழ்ந்ததோ, அதே சமுதாயம் இன்று அவள் தாலியை அறுத்துவிட்டுத் தானும் சேர்ந்து கதறுகின்றது. எந்தச் சாத்திரங்கள் நேற்று வரையும் சாதகமாக விருந்ததோ அதுவே இன்று அவளைக் கைம்பெண்ணாக்கித் தனிச் சட்டமியற்றி அவள் உள்ளத் தாசையை எல்லாம் தரை மட்டமாக்கியது. அதற்கு முடிவு கட்ட……"

"என்ன செய்யப் போவதாக நினைக்கிறாய் மங்களா…?" என்றாள் சுகுணா.

"நினைப்பதென்ன... இனி என் உடலில் உள்ள ஒவ்வொரு இரத்தத் துளியும் பெண்களின் முன்னேற்றத்திற்காகவே பயன்படுத்தப்படும். பெண் இனத்தில் பூட்டப்பட்டிருக்கும் ஒவ்வொரு வகை விலங்கையும் தகர்த்தெறிவதுதான் என் எண்ணம்" என்று கூறிவிட்டு மாடிப் படிகளின் வழியாக இறங்கிச்சென்று விட்டாள் மங்களா. இவ்வளவையும் கேட்டுக் கொண்டிருந்த சுகுணா பெருமூச்சு விட்டவாறு சோபாவில் சாய்ந்தாள்.

சிறு வயதிலேயே பெற்றோரை இழந்து அநாதையாக விளங்கிய மங்களாவை ஓர் அநாதை விடுதி அடைக்கலம் அளித்து அணைத்துக் கொண்டது. அதன் ஆதரவிலே வளர்ந்து M. B. B S. பாஸ் செய்துவிட்டு அவள் டாக்டர் பட்டமும் பெற்றாள். சிறு வயதிலே தனிமையையும் மோனத்தையுமே விரும்பியது அவள் உள்ளம். இயற்கையின் எழிலைக் காண்பதையும் வானத்தின் எல்லையில்லாத சூனியப் பிரதேசத்தைக் காண்பதையும் ஏனோ அவள் மனம் பெரிதும் விரும்பியது. தன்னைப் போன்ற பெண்கள் பிச்சை எடுப்பதைக் காணும்போது அவள் கண்கள் கலங்கும். சில சமயம் கதறி அழுதும் விடுவாள். பெண்களைக் கொடுமைப் படுத்துவதுபோன்று எழுதியுள்ள நூல்களைப் படிக்கும் போது அவர்கள் படும் இன்னலை நினைத்துக் கண்ணீர் உகுப்பாள். அடிமைத்தனம் பெண்களிடத்தில்தான் பெரும்பாலும் உள்ளதென்றெண்ணிப் பெருமூச்செறிவாள். அறிவற்ற சிறுமிப் பருவத்திலிருந்து பருவம் என்ற போர்வைக்குள் மாறும்போது பெற்றவர்களுடைய கட்டுத் திட்டங்களுக் கடங்கியிருந்து மணமானபின் கணவனுடைய அதிகாரத்திற் கடிமைப்பட்டு அவன் மாண்டதும் சமூகத்தினுடைய—அது வகுத்துள்ள—வழிப்படி நடக்கவேண்டும். இதிலிருந்து தவறினால் 'விபசாரி'' "வாழாவெட்டி'' "சூனியக்காரி'' எனப் பெயர்களைச் சூட்டி மகிழும் சமுதாயத்தைக் கண்டு அவள் உள்ளம் எரியும்.

அழகுள்ள மலர்; அன்று மலர்ந்தது. அதன் மணம் எங்கோ ஓடிக்கொண்டிருக்கும் வண்டின் பார்வையைத் தன் பக்கம் திருப்புகின்றது. எட்டச் சுற்றுகிறது வண்டு. மலரின் இதழ்களில் நாணங் கலந்த புன்னகை பாய்ந்து செல்லுகிறது. அம்மலர் நாணத்தால் தலை குனிந்து கடைக் கண்ணால் பார்த்தது. அந்த வேல்விழிப் பார்வையைப் பொறுக்க மாட்டாமல் மயக்கத்தில் மலரிழையாளின் கையைப் பற்றியது. முதலில் பயந்தது. பிறகு பரிதாபகரமாகப் பார்த்தது காதலனை. அப்பார்வை 'என்னைக் கைவிட மாட்டீரே' என்று கேட்பது போலிருந்தது. 'உன்னையா' என்று கூறி அருகில் உட்கார்ந்தது. சிறிது நேரம் அமைதி. பிறகு தான், போய் வரட்டுமா' என்று

ஓசையிட்டுக் கொண்டே எழுந்தது வண்டு.

“மறந்து விடாதீர்—கைவிட்டால் கதியில்லை” என்று கூறுவது போலிருந்தது மலரின் நிலை. வண்டு ஓடிவிட்டது....வசந்தமும் ஓடிவிட்டது. கண்ணீர் மல்கிய விழிகளுடன் இருளில் ஏங்கிக் காத்துக் கிடந்தது மலர். அதன் உடல் அழகு மறைந்தது. முதுமை குடிகொண்டது. மறுநாள் காலையில் அம்மலராளின் காதலன் வந்தான். ஆவலுடன் எதிரழைக்க வாயைத் திறந்தது. மலர். ஆனால் வண்டின் முகம் ஒரு முறை சுருங்கி விரிந்தது. அதன் நோக்கம் அருகிலிருந்த வேறொரு மலரின்மீது விழுந்தது. அவ்வளவுதான்! மறுகணம் புதுமலரை வட்டமிட்டு அதை நெருங்கியும் விட்டது. ‘ஐயோ’ என்றலறியவாறு கண்களை மூடிக்கொண்டது வாடி, வடிவிழந்து, வாழ்விழந்த அந்த மலர். அதற்குத்தான் நின்றிருந்த இடமே—ஏன்! உலகமே சுற்றுவதுபோலக் காட்சியளித்தது. அடுத்த வினாடி மலர் செடியினின்றும் கீழே விழுந்தது. மறுபடியும் கண் விழித்த போது தரையில் விழுந்து கிடப்பதைக் கண்டு வருந்தியது. அதற்கு முன்பே வாடி விழுந்திருந்த மலர்கள் அம்மலரைக் கண்டு சிரித்தன, “நீயும் இப்படியா?” என்று. அதைக் கண்டு தலை குனிந்தது அம்மலர். அதன் இதழ்களில் வறண்ட புன்னகையொன்று இழைந்தோடி மறைந்தது. இப்படி ஒரு ஆசிரியர் பெண்ணின் வாழ்க்கையை மலரினுடன் ஒப்பிட்டுக் காட்டுகிறார். மலரினின்றும் மங்கை எந்த விதத்திலும் வேறுபட்டவள் அல்லள் என்பது அவருடைய கருத்து—இதைப் படித்த அவள் கண்கள் நீரைக் கக்கும். கருணையினாலல்ல! ஏழ்மையில்.

சிறு வயதிலேயே அழகுடன் விளங்கிய மங்களா பருவப் போவைக்குள்ளே புகுந்தபின் அழகுச் சிலையாகக் காட்சியளித்தாள். அவள் அழகைக் கண்டு மோகங்கொண்ட இளங் காளைகள் முன் வந்தும் அவர்களை அவள் மனம் விரும்பாமல் பொதுச் சேவையில் ஈடுபட்டது. அப்போதுதான் அகதிகளுக்குத் தொண்டாற்ற ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் திரண்டு சென்று கொண்டிருந்தனர். அவர்களில் அவளும் ஒருத்தியாகச் சென்று கொண்டிருந்தாள்.

அகதி முகாமுக்கு வந்ததிலிருந்து எல்லா வேலைகளையும் அவளே மேற்கொண்டாள். அடிபட்டு அவதியுற்று வந்து நிற்கும் அகதிகளுக்குக் கட்டுக் கட்டுவது முதல் அவர்களுக்கு உணவு பரிமாறுவது வரையில் யாவும் அவள் இலாகாவைச் சேர்ந்தவை. அதில் அவளுக்குத் தனி உற்சாகம், எல்லை கடந்த அன்பு, ஏன்—அதைப் பெருமையாகவே மதித்து அதன்படியே நடந்து வந்தாள். இதனால் அகதிகளுடைய உள்ளத் திரையிலே மங்கா ஓவியமாகத் திகழ்ந்தாள் அவள்.

காலச் சக்கரத்தடியில் மூன்று வருஷங்கள் சிக்கிச் சிதைந்து சீரழிந்து போயின. “விதி’ என்ற சிற்பி சிறந்த கல்லொன்றைத் தேடிக் கொண்டிருந்தான். கடைசியாக நல்ல கல்லும் கிடைத்து விட்டது. அதை உருவாக்குவதில் முனைந்துவிட்டான். காலம் என்ற உளியினால் புகழ் என்ற கீறல்களை உண்டாக்கிக் கொண்டிருந்தான்.

வெளியே நிலவு காய்ந்து கொண்டிருந்தது. ஒளி வெள்ளமிட்டோடியது. இரவின் அமைதியைக் கிழித்துக் கொண்டு பழனையின் கரையிலிருந்து பாடும் கவிஞனின் கானம் காற்றில் மிதந்து வந்தது. மாடிச் சுவர் மீது அமர்ந்த வண்ணம் பாட்டில் ஈடுபட்டுத் தன்னை மறந்திருந்த சுகுணா தன்பெயரைச் சொல்லி யாரோ அழைப்பதாகக் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். எதிரே மங்களா நின்றுகொண்டிருந்தாள்.

“ஏன் சுகுணா ஆள் வருவது கூடத் தெரியவில்லையே... அங்கே என்ன செய்கிறாய்...”

“ஓ...மங்களாவா! எப்போது வந்தாய்?...இப்படி வாயேன்...’ எனக் கூவியவாறு ஓடி வந்த சுகுணா மங்களாவுக்குப் பின் நின்றிருந்தவர்களைக் கண்டதும் திடுக்கிட்டாள். அவள் ஏறிட்டுப் பார்த்தாள் மங்களாவை. அவள் முகத்தில் படர்ந்திருந்த சுருக்கத்தைக் கண்டவுடன் லேசாக முறுவலித்தாள்.

“சுகுணா..., எனக்குப் பிறகு... இப்பணியை நீ தான்...’’ இதைக் கூறி முடிக்கு முன்பே அவள் தலை சாய்ந்து விட்டது. கூட்டை விட்டு உயிர் பறந்து சென்று விட்டது.

விதியின் இதழ்களில் இன்பப் புன்னகை இழைந்தோடி மறைந்தது. அவள் எதிரில்—அழகுச் சிலை—புகழ்ச்சிலை—மங்களாவின் சிலை சிரித்துக்கொண்டு நின்றது. அதன் கண்களில் கருணை வழிந்தது.

“சுகுணா இவர்களை யாரென்று தெரிகிறதா!...இவர்கள் தான் காந்தி கண்ட கனவை நனவாக்கியவர்கள்.’ என்று கூறிவிட்டு அலைந்துகொண்டிருந்த கூந்தலைச் சரி செய்தாள்.

“புரிய வில்லையே!...” அவளுக்கு வியப்பாயிருந்தது அவள் கூறியது.

“அது தான் சுகுணா...ஒவ்வொரு மாணவனும் ஒரு விதவையை மணக்க முன் வரவேண்டும் என்று கூறிச் சென்றாரே அதைத்தான் கூறுகிறேன். இந்த விதவா விவாகத்தை வைதீகம் எதிர்த்தது! சனாதனம் சாடிற்று! கையால் ஆகாதவர்கள் வீண் பேச்சாடினர்...கோழைகள் பின் வாங்கினர்...அறிவாளிகள் அக மகிழ்ந்தார்கள் உயிரையே பணயமாக வைத்துப் போராடினேன். உண்மையைக் கூறி நேர்மையை நாடினேன்...முடிவில்...”

அறியும் காட்சி அறையில் (Laboratory) நேரில் காண்கின்றனர். வள்ளுவர் மெய்ப்பொருள் காண்பது என்று இன்னும் சில இடங்களில் கூறுவதும் இதனை வற்புறுத்துகின்றது என விஞ்ஞானிகள் வாதாடுதலும் கூடும்.

விஞ்ஞானப்புள்ளி:—விஞ்ஞானம் என்பது செயற்பாட்டு நிலையில் (Experimental) ஒளிரும் விளக்கமே ஆம். தத்துவஞானமோ அறிவு நிலையில் எழும் விளக்கம் ஆகும். ஆனால் இரண்டிடத்தும் பொதுமை நிலையே விளங்குகிறது. போரிலே செல்லும் வீரர்களுக்கு வேண்டிய உடைகளைத் தைக்கும் பெரு முயற்சி உலகம் முழுதும் சில ஆண்டுகளுக்கு முன் நடைபெற்று வந்ததை நம்மில் பலர் கண்டிருக்கிறோம். அவ்வுடையை அணிபவரோ எங்கோ ஓர் புறத்தில் இருக்கின்றனர். படையில் இனிமேல் சேரப் போகிறவர்களுக்கும் உடைகள் தயார் செய்யப்பட்டன. சேர்ந்தவர்கள் எங்கெங்கோ சிதறிக் கிடந்தனர். அவர்கள் யாவருக்கும் உடைகள் தயாரிக்கப்பட்டன. சேர்ந்தவர்களுக்கும் சேர்கின்றவர்களுக்கும் இனிப்போய்ச் சேரப்போகிறவர்களுக்கும் ஏற்ற உடை தைக்கும் மாயைதான் என்ன? மாயையும் இல்லை மந்திரமும் இல்லை, எல்லாம் கணக்கே தான். 'மனிதருக்கு மனிதர் வித்தியாசம் இல்லையா?'! என்றெல்லாம் எண்ணுகிறோம். வீரர்கள் படையிற் சேரும்போது அவர்கள் இவ்வளவு உயரம் இருக்கவேண்டும், அவர்கள் மார்பு அகலம் இத்தனை அங்குலம் இருக்க வேண்டும்; கழுத்து அளவு இவ்வளவு இருக்கவேண்டும் என்று வரை அறுத்துக் கணக்கிடவில்லையா? ஆளுக்கு ஆள் மாறுபட்டிருப்பினும் இவர்களிடையே சில பொது இயல்புகளும் உண்டு. இதனை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளார்கள். அதன் பயனாக ஒரு சில உடைகளைத் தைத்தால் அதனை எவரும் உடுத்தலாம் என்பது வெளியாயிற்று. அதாவது இப்பெரிய கூட்டத்தை ஒரு சில பகுதிகளின் கீழ் வரையறுத்து ஒவ்வொரு வகையான பகுதியிலும் சராசரி எத்தனை எத்தனை வேண்டும் என்றும் கணக்கிட்டு உள்ளார்கள். இன்றைய விஞ்ஞானம் இவ்வாறு புள்ளியிட்டு உலகை அடக்கி ஆண்டு வருகிறது. இங்கு விஞ்ஞான ஆராய்ச்சியின் முடிவாய் இருப்பதெல்லாம் இத்தனை அங்குலம் மார்புக்கு, இத்தனை அங்குலம் கழுத்துக்கு, இத்தனை அங்குலம் உடல் நீளம், என்ற இவைபோல விளக்கும் சில புள்ளிக் கணக்கேயாம். ஆனால் இந்தப் புள்ளியா உடை? இந்தப் புள்ளியா அதை அணியும் வீரர்கள்? அல்லரே அல்லர். இவை எல்லாம் அறிகுறிகளேயாம்.

பொருளும் அடையாளமும்

அழகிய தாஜ்மஹால் (Taj Mahal) கட்டடம் ஒன்று கண் முன் காட்சியளிக்கிறது. அதைக்

காணாத என் நண்பர் அதன் அளவை விளக்கிக் காட்டும் நில அளவுப்படம் (Plan) ஒன்றில் பார்க்கிறார். பின்னர் அதன் புகைப் படத்தையும் காண்கிறார். இவை அதன் உண்மைத் தோற்றத்தைக் காட்ட முடியுமா? முடியாது. நில அளவுப் படம் போன்றது விஞ்ஞானம் காட்டும் உண்மை. உலகமோ தாஜ்மஹால் போலப் பொருள் செறிந்து பொலிகிறது. சம்பந்தரது அழகிய பண்ணிறைந்த பாடல்கள் கடவுள் ஒலிக்கோவையாக இனிக்கின்றன. அப்பாடல்களைச் சுரப் படுத்தி 'ஸரிகம, ஸரிகம'' என்றெல்லாம் இசைக் குறிப்பாக எழுதி வைத்திருக்கும் சங்கீத பாடமும் வழங்கி வருகிறது. சம்பந்தர் பாடல் உயிருள்ள இசையாம்; இசைக் குறிப்போ இசையாராய்ச்சியின் பயனாகும். ஆனால் பண்ணை அறியாதாருக்கு இசைக் குறிப்பால் என்ன விளங்கும்? படிக்கின்ற குழந்தையின் தலைதான் வெடித்துப்போகும். சம்பந்தர் பாடலோ உலகம் போன்றது. இசைக் குறிப்போ விஞ்ஞானிகள் போடும் புள்ளிக் குறிப்புச் சமன்பாடுகள் (Equation) போன்றது.

உள் உணர்வும் (Intiution) காட்சியும்

(Perception) உலகில் ஒவ்வொரு பொருளும் முதல் முதல் காட்சியளிக்கும்போது நம் மனத்தினைக் கவர்ந்துகொண்டு காட்சியளிக்கிறது. அங்கும் பிரிந்து ஆராயும் ஆராய்ச்சி இல்லை. நாம் பழத்தை உண்கிறோம். முதலில் இனிய அனுபவமே உண்டு. நல்லதா, கெட்டதா? இனிக்கிறதா? புளிக்கிறதா? என்ற ஆராய்ச்சி பின் எழுவதே அன்றி, அனுபவத்தின்போது எழுவது இல்லை. நன்றாயிருக்கிறது என்று நாவினைத் தட்டுவதும் பின் கணத்திலேதான் நிகழுகிறது. முதலில் எழுவது உள்ளுணர்வு. இரண்டாவது எழுவதே பகுத்துணர்வாம். உள்ளுணர்வால் எழும் புரட்சியே உண்மைக் காட்சியாம். பகுத்தறிவால்எழுவதே ஆராய்ச்சித் தொடராம். உள்ளுணர்வே கலையுணர்வாகக் காய்த்து, மெய்யுணர்வாகப் பழுத்து, இன்பச்சாறு கொழிக்கின்றது. பகுத்துணர்வே விஞ்ஞானமாய் முற்றி உலகினை விழுங்குகிறது. ஒரு வகையால் நோக்கும்போது கலைஞானமும் மெய்யுணர்வுமே அனுபவப் பழத்தின் சாறாகும். விஞ்ஞானமோ அப் பழத்தின் வடிவினைக் காட்டும் தோலும் கொட்டையும் கோதுமாம்.

ஒற்றுமைக் காட்சியும் வேற்றுமைக் காட்சியும்

கலைஞானமும் மெய்யுணர்வும் ஒற்றுமைக் காட்சியாம். விஞ்ஞானம் பகுத்தறிவால் ஆராய்ந்து பார்க்கும் வேற்றுமைக் காட்சியாம். எல்லாவற்றையும் தொடர்பு படுத்தி விஞ்ஞானம் காணும் போது ஒரு ஒற்றுமைக் காட்சி

தோன்றுகிறது. அது பொருளின் ஒற்றுமைக் காட்சி அன்று. பொருள்கள் இயைந்து நிற்கும் இயைபுகளின் ஒற்றுமைக் காட்சியாம். விஞ்ஞானம் காண்பானும் காட்சியும் அக நிலையும் (Subjective) புறநிலையும் (Opjective) ஆம் ஆராய்ச்சியாகப் பிரிந்து விளங்குகிறது. புறக் காட்சியில் அனைத்தும் அணுக்களாம் மின்னாற்றலாய், இடமும் காலமுமாய் இயைந்ததோர் இயைபாய் (Space-time Continuum) விளங்கக் காண்கின்றனர் விஞ்ஞானிகள்.

பரிணாமவாதம்

அகநிலை ஆராய்ச்சியும் புறப் பொருளைப் பின் பற்றியே ஓடுகிறது. உயிர்த்தோற்றப் பெருக்க முறை, மலர்ச்சி முறை, பரிணாம முறை, உள்ளது சிறக்கும் கூர்தல் முறை... இப்படி ஆராய்ச்சி எழுகிறது. உயிர்த்தோற்ற வளர்ச்சியில் அறிவு தோன்று முறையும் விபத்துக்கு ஆராய்ச்சியாக எழுகிறது. மனத்தினுள்ளே அடிப் படையாக விளங்கும் தொலைவில் உணர்தல் (Telepathy) அறிதுயில் (Hypnotism) முதலிய அகநிலைப் பேராற்றல்களைக் கனவு கண்டது போலக் கண்டு நிற்கிற முறையும் தோன்றுகிறது. இதனைப் பற்றிய ஒருமுகப்பட்ட கொள்கையை விஞ்ஞான ஆராய்ச்சியாளர் இன்னமும் கூற வரவில்லை. அலக்ஸ் கார்டல் (Alex Cardel) என்ற நோபல் பரிசிலாளர் கூறுவதுபோல இவற்றை விஞ்ஞானம் மறுப்பதற்கும் இல்லை.

காண்பான்.-வெளிப்பட்டுத் தோன்றுகிற புறப்பொருள்கள் வழியாக இவ்வாறு ஆராய்ந்து வருவதன் காரணமாகக் காண்பான் காட்சி என்ற எல்லாவற்றையும் ஜடப்பொருளாகக் கூறி விடுவது எளிது. ஆனால் இவ்வாறு எல்லாவற்றையும் ஜடதத்துவத்தில் அடக்கிக்கூற இப்போது சில விஞ்ஞானிகள் ஒருப்படுவதில்லை! அம்மட்டுமா? எல்லாவற்றையும் அறிவின் திருவிளையாடல் எனக் கூறுகின்ற அறிஞர்களும் உண்டு. ப்ளேடோ (Plato) சங்கர் முதலானோர் இக் கூட்டத்தைச் சேர்ந்தவர்களே யாவர். மக்கள், விலங்குகள், பறவைகள் என்றவற்றில் மட்டுமேயன்றி புல்லிலும் கல்லிலும் கூட உயிரின் இயக்கத்தைக் கண்டு அறிவின் ஆற்றல் என வழிபடுகிறவர்களும் உண்டு.

'புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப்பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத் தேன் எம்பெருமான்

(திருவாசகம்)

என வளர்கின்ற பரிணும முறையும் விஞ்ஞான உலகத்திற்குப் புதுமையன்று. ஜடப்பொருளைச் சித்துப் பொருள் என்று எப்படிக் கூறுவது? நம்மை நாம் பார்த்தால் விளங்கும். பழக்கமானவற்றை எந்திரம்போலவே அறிவின்றிச்செய்து வருகிறோம். போர் வீரர்கள் (Attention') அடென்ஷன் அல்லது உன்னிப்பு என்று சொன்ன உடனே கையைத் தொங்கவிட்டுக் கொண்டு நிமிர்ந்து நிற்பார்களாம். இவ்வாறு பழகிப் போர்வீரன் கிழவனுகி வேலையைவிட்டு விட்டு வீட்டுக்குத் திரும்பியபோதும் இவ்வார்த்தையைக் கேட்ட உடனே கையில் உள்ளதைக் கீழே போட்டு நிற்பாளும். பாலும் தயிரும் கொண்டு வீடு திரும்புகின்ற கிழப் போர்வீரன் எதிரே குறும்புச் சிறுவன் ஒருவன்விளையாட்டாக "அடென்ஷன்' என்று கூறினுன்; விசை முறுக்கிய எந்திரத்தைப்போல ஒன்றும் பாராமல் கையில் இருப்பவற்றை எல்லாம் கீழே எறிந்துவிட்டுக் கையைத் தொங்கவிட்டுக்கொண்டு மிடுக்காக நிமிர்ந்து நின்றுளும் கிழவன். இதனைக் கண்ட சிறுவன் கைகொட்டிச் சிரித்தாளும். எனவே எந்திர நிலை ஜடநிலை என்று கூறுவதெல்லாம் உடலில் ஊறிவிட்ட பழக்கத்தின் நிலையேயாம். மரங் கொடிகளை உயிருள்ள பொருள்களென்று நம் நாட்டுக் குழந்தைகளும் கூறும். சர். ஜெகதீச சந்திரபோஸ் (Jagadesa chandra Bose) என்பார் மரங் கொடிகள் கிள்ளப்பெற்றுல் துள்ளி எழுவதனையும், துடிதுடிப்பதனையும் செய்க்காட்சி மூலம் கண்கூடாகக் காட்டினுர். உலோகங்களும் உயிருள்ளவையே என்பது அவருடைய கொள்கை. தூண்டுதலுக்கு எதிரே துலங்குதல்தான் உயிரின் இலக்கணம் என்பார் அப்பெரியார். உயிருள்ள பொருள்கள் போல இரும்புக்கும் ஓய்வு வேண்டி இருக்கிறது. ஓயாமல் வேலை செய்தால் நம் தசைகளில் நஞ்சு பாய்கிறது, களைப்பு எழுகிறது. இவ்வாறே உலோகங்களிலும் ஓயாமல் வேலை செய்யும்போது நஞ்சு பாய்கிறதாம். எனவே "கல்லாய் மனிதராய்" என்று மாணிக்கவாசகர் பாடுவது அறிவின் திருவிளையாடலையேயாம்.

கடவுள் நிலை

பெருஞ் சடத்திற்குப்பொருள் ஒன்றுமில்லை. அது உண்மையாவதும் இல்லையாம். அவற்றிற்கும் பொருள் கொடுப்பது மனிதனேயாம். மனிதன் அழியவில்லையா? அழிந்தாலும் தன் உள்ளாற்றலால் அழியா நிலையைப்படைத்துவிடுகிறுன். ஒரு கல்லிடையே அழகிய வடிவத்தைச் செதுக்குகிறுன் சிற்பி. அச்சிற்பி இறப்பினும் அவ்வடிவம் அழியாது வாழ்கின்றது. இத்தகைய அமரவாழ்வு ஒவ்வொரு கோயிலிலும் காணக்கிடைக்கவில்லையா? ஹோமர் இறந்தார், கம்பர் இறந்தார், வால்மீகி இறந்தார், ஷேக்ஸ்பியர் இறந்தார். அவர்களுடைய

காப்பியங்கள் சாகின்றனவா? சாவாப் பெருவாழ்வு இதுதான். உலகைக் கடந்து நிற்கும் நிலை இதுதான். இங்கு ஒரு கடவுள் நிலை விளங்குகிறது. இயற்கையில் தோன்றும் நிலையைக் கடந்த நிலையன்றோ இது. எண் குணத்தான் நிலை இது. நாம் அறிந்த ஆற்றலுக்கெல்லாம் அப்பாற்பட்டு அவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டது இது. ஆதி பகவன் நிலை இது. அறிவின் எல்லை இதுதான். வால் அறிவின் நிலை இது. அன்பாய் மனத்திற் பாய்ந்து இன்பம் பொங்கும் இடம் இது. மலர்மிசை ஏகினான் நிலை இது. அறவாழி அங்குத்தான் சுழல்கின்றது. அருளே வடிவான அந்தணன் நிலை இது. குறைவிலா நிறைவு இது. அங்கு வேண்டுதல் வேண்டாமை இல்லை. தனக்குவமை இல்லாத பெருநிலை அது. எல்லாம் நிறைந்த நிலையில் பொறி வாயில்கள் எதைத் தேடி அலையும்? இவ்வாறு திருவள்ளுவர் கூறும் கடவுள் நிலையின் மேலும் உற்றுநோக்கி ஆராய்தல் வேண்டும்.

"ஆரம்பக் கல்வி" ஆபீஸ்

94-95, புதுத் தெரு, மண்ணடி, சென்னை, 1.

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-0

ரிகார்ட் ஷீட்டுகள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-8

பிராவிடண்ட் பண்டு கட்டும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-0

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத்தாள்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 1-0

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு (சரிபார்த்தனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-0

(தபால் செலவு உட்பட)
ஒவ்வொன்றிலும் 25 பாரங்களுக்குக் குறையாமல்
முன்டணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

CONNEMARA PUBLIC LIBRARY
29 MAY 1955
MADRAS

பண்புடைமை

[illegible]வேலன், ஆசிரியன், கா. பாளையம்.

வாழ்க்கைக்கு முடியாக அழகு செய்வதும் புகழினைப் பரப்புவதும் ஒருவனுடைய பண்புடைமையாகும். அதுவே மனிதனின் உயர்ந்த சொத்து. அது சமுதாயத்திலே பொதுவாக நல்லெண்ணத்தைத் தோற்றுவித்து படிப்படியான முன்னேற்றத்திலே ஒவ்வொரு பதவியையும் அதிகப்படுத்தி தன்னிருப்பிடத்தை விளக்கமுறச் செய்து செல்வத்தினும் மேம்பட்டு விடுகிறது. புகழைப் பற்றிய பொறாமைகளை உண்டாக்காமல் எல்லாப் பெருமைகளையும் தேடித் தருகிறது. பிறரால் சொல்லப்படுகின்ற செல்வாக்கையும் அது கொண்டு வருகிறது. அதுவே மனித சமூகத்தின் நம்பிக்கைப் பொருளாகிறது.

உயர்ந்து வளர்ந்த மனித இயற்கையே பண்புடைமை. தனிப்பட்ட மனிதனிடத்தில் பொருத்தப் பெற்ற ஒழுங்கு முறைச் சட்டம். பண்புடை மனிதர்களே சமூகத்தின் மனச்சாட்சிகள். தகுதியான ஆட்சி பெற்ற ஒவ்வொரு நாட்டிலும் அவர்கள் உயர்ந்த நோக்கத்தையும் ஆற்றலையும் தருபவர்கள். ஏனெனில் ஒழுங்குமுறைப் பண்புகளே உலகத்தைத் தலைமையாக ஆளுகின்றன. நெப்போலியன் சண்டையிலுங் கூட "உடல் வலிமையைவிட பத்து மடங்கு வல்லமை ஒழுங்கு முறைக்கு உண்டு" என்றான். தனித்த மனிதர்களின் பண்புடைமையில்தான் நாடுகளின் ஆற்றல், முயற்சி, நாகரிகம்— இவை அடங்கியிருக்கின்றன. மனித உடைமைகளின் பாதுகாப்புக்குரிய அடிப்படைகளுங் கூட அவற்றின் மேல்தான் பொருந்துகின்றன. சட்டங்களும் கல்வி நிலையங்களும் அவற்றின் வடிவாகவே பெருகி வளருகின்றன.

நாகரிகம், திறமை, செல்வம்— இவை ஒரே அளவில் குறைவாகவே ஒரு மனிதனிடமிருப்பினும், அவனுடைய பண்பு நிலை பெற்ற தகுதி யுடையதானால் அவன் நிச்சயமாக ஆலைக் களமாயினுஞ்சரி, (Work shop) செலாவணியிடமாக இருந்தாலும் சரி, (Counting house) கடைத் தெருவாக இருந்தாலும் சரி, (Market) சட்டசபையாக இருந்தாலும் சரி (Senate) செல்வாக்கைத் தேடிக் கொள்வான். 1801ல் கானிங் என்பவர் "என்னுடைய பாதை பண்புடைமையிலிருந்து அதிகாரத்தைத் தேடிச் செல்வதாகும். நான் வேறெத் துறையிலும் முயற்சிக்க மாட்டேன். இத்துறை மிக விரைவானதாக இல்லாமலிருந்தாலும்

கூட நிச்சயமான நன்மை தருமென்பதை உறுதியாக நம்புகிறேன்'' என்று எழுதினார். அறிவாளிகளை நீங்கள் பாராட்டலாம்; ஆனால், அவர்களை நம்புவதற்கு மேலும் ஒன்று தேவையாக இருக்கிறது. அதனால் லார்டு ஜான் ரஸ்ஸல் என்பவர் ஒருதரம் மேதைகளின் உதவிகளை எதிர்ப்பது இங்கிலாந்தின் ஒவ்வொரு கட்சியின் இயல்பு என்றும் அதைப் போலவே ஆன்றோர்களின் அறிவுரைகளைப் பின்பற்றுவதும் இயல்பு என்றார். இது மிகச் சரியாக காலங் கடந்த பிரான்சிஸ் ஹார்னர் என்பவரின் வாழ்க்கையில் விளக்கமாகிறது. அவர் முகத்தில் ஏசுவின் பத்து கட்டளைகளும் முத்திரையிடப்பட்டதாக சிட்னி ஸ்மித் கூறுகிறார். லார்டு காக்பர்ன் என்பவர் விலை மதிப்புள்ளதும் விநோதமானதுமான ஒரு ஒளியிலமைத்தவர் வரலாறு என்கிறார். நேர்மையான மனமுடைய ஒவ்வொரு இளைஞனையும் ஊக்கப்படுத்த குறிக்கப்பட்டவை. அவர் முப்பதாம் வயதில் இறந்து போனார். ஆனாலும் வேறெந்த தனித்த மனிதனுமடையாத செல்வாக்கைப் பெற்றிருந்தார். பிடிவாதமோ, குரூரமோ உள்ள மனமுடையோர் தவிர மற்றெல்லோருமவரைப் பாராட்டினர்; நேசித்தனர்; நம்பினர்; வழிபட்டனர். இறந்த எந்த உறுப்பினருக்கும் பார்லிமெண்டில் இவருக்குச் செலுத்தியதைப் போல அதிகமான மரியாதை செலுத்தப்படவில்லை. இப்போது ஒவ்வொரு இளைஞனும் கேட்கட்டும் இதை எவ்வாறு அடைந்தார்? அந்தஸ்தினாலா? இல்லை; அவர் ஒரு எடின்பரோ வியாபாரியின் மகன். பணத்தினாலா? இல்லை; அவரோ அவருடைய சுற்றத்தார்களோ ஆறு பென்ஸ்கூட உயர்ந்த அளவில் பெறவில்லை. உத்தியோகத்தினாலோ? இல்லை; அவர் ஒரே ஒரு உத்தியோகத்தைத்தான் சில ஆண்டுகள் செல்வாக்கில்லாமல் மிகக் குறைந்த சம்பளத்தில் செய்தார். புத்தியினாலா? அவர் ஒரு மேதையுமல்ல; எச்சரிக்கையாகவும் மெதுவாகவும் இருந்தார். சரியாக நடப்பதே அவர் குறிக்கோள்: பேச்சுத் திறத்தினாலா? கிளருகின்ற அல்லது நடுக்கத்தை உண்டாக்குகின்ற எத்தகைய சொல்வன்மையும் பின்பற்றாமல் அமைதியான நல்ல முறையிலே அவர் பேசினார். நடத்தையின் கவர்ச்சியினாலா? அவர் நடத்தை ஒத்துக் கொள்வதாகவும் சரியானதாகவு மிருந்தது. பின் எதனால் அது வந்தது? நியாய உணர்ச்சி, இடைவிடா முயற்சி, நல்ல கொள்கை, நன்மணம்—ஆகிய ஒழுங்கான முறையிலே அமைந்த எந்த மனமுடையவனும் அடைவதற்குத் திகைக்கத் தேவையில்லாத சாதாரண பண்புகளினால்தான் அவர் அடைந்தார். பண்புடைமையின் வேகந்தான் அவரை உயர்த்தியது. இயற்கையாகவே இந்தப் பண்புடைமை அவரிடம்

பொருந்தப் பெறவில்லை. ஆனால் அவராலேயே ஆக்கப் பெற்றது. ஹார்னர் போட்டியும் பொறாமையும் நிறைந்த பொது வாழ்வில் இத்தகைய ஆற்றல்களும் வெளிப்பட்டாலுங்கூட சாதாரண ஆற்றல்கள் பண்பாடும் சான்றாண்மையும் தவிர வேறு எந்தப் பண்புகளின் உதவியில்லாமல் அடையக்கூடிய புகழைச் சுட்டிக் காட்டுவதற்காகவே பிறந்தார்.

ஃப்ராங்ளின் என்பார் தம் பொது வாழ்விலுள்ள நிலைபெற்ற பண்புடைமையையே அடையாளமாகக் கொண்டார். நான் என் நகர மக்களிடம் அதிக செல்வாக்கினைப் பெற்றது இதனால்தான் என்று கூறுகிறார். மேலும் அவர் தாம் ஒரு உபயோகமற்ற பேச்சாளி என்றும் அறிவுக் கூர்மை நிறைந்தவராகக் கருத முடியாதென்றும் சொற்களைத் தேர்ந்தெடுப்பதில் மிகுந்த தாமதம் ஏற்படுகின்றதென்றும் மொழியைப் பேசுவதில் தவறுதல்கள் ஏற்படுகின்றதென்றும் இருந்தாலும் தமது கொள்கையை வற்புறுத்திச் சென்றதாகக் கூறுகிறார். தாழ்ந்த வாழ்விலாயினும் சரி, உயர்ந்த பதவியிலாயினும் சரி மனிதனிடத்தில் நம்பிக்கையைத் தோற்றுவிப்பது பண்புடைமையாகும். அரசியல் முறைக்கு ஒப்பானதாக பண்புடைமை விளங்குவது ரஷ்ய வீர அரசர் அலெக்சாண்டரிடம்தான் என்று சொல்லப்படுகிறது. பிரெஞ்சு உள்நாட்டுப் போர்கள் நடந்தபோது சம்பந்தப்பட்ட பிரெஞ்சுக் கோமகனார்களில் மான்டீக் ஒருவர்தான் கோட்டைக் கதவுகளைத் திறந்து வைத்தார். அவருடைய பண்புடைமை ஒரு குதிரைப் படையைவிட உயர்ந்தது என்றே அவரைப் பற்றித் தெரிந்தவர்கள் குறிப்பிட்டார்கள்.

பண்புடைமையே வலிவுடைமை, என்பது அறிவுடைமையே வலிவுடைமை என்பதைவிட உயர்ந்தது என்பது ஓரளவு உண்மை. உணர்விலா மனம், ஒழுங்கிலா அறிவு, பண்பிலா அறிவுக் கூர்மை ஆகியவை அவ்வவைகளுடைய வழிகளில் ஆற்றல் மிகுந்தவைகளே யாகும். ஆனால் குறும்புக்குத் தானவை ஆற்றல்களாக விளங்கும். நமக்கு அவை சிலவற்றைக் கற்பிக்கவும் மகிழ்ச்சி யூட்டவும் செய்யலாம். சில சமயத்தில் ஜேபடித் திருடனுடைய சாமர்த்தியத்தைப் பாராட்டுவதோ அல்லது குதிரை சவாரித்தனத்தைப் பாராட்டுவதோ எவ்வளவு கடினமானதோ அவ்வளவு கடினமானதாக இவற்றைப் போற்றுவது அமைந்து விடும்.

உண்மை, நேர்மை, நற்பண்பு ஆகிய பண்புகள் ஒரு மனிதனுடைய மூச்சிலே தொங்கவில்லை. மனிதப் பண்புகளுடைய சாரமாக அவை அமைகின்றன. பண்புகளை உடைமைகளாகக் கொள்ளுகின்ற மனிதன் நோக்கத்திலே உறுதியுடையவனுமாக இருந்தால் எதிர்க்க முடியாத ஒரு ஆற்றலைப் பெறு

கின்றான். அவன் நன்மையைச் செய்யவும், தீமையை எதிர்க்கவும், துன்பத்தையும் துரதிருஷ்டத்தையும் தாங்கவும் வலிவுடையவனாக இருப்பான். கொலன்ஷவியிலுள்ள ஸ்டீபன் என்பவன் பிடிவாதக்காரர்களான கொலைகாரர்களிடையே சிக்கியபோது அவர்கள் கேலியாக "உன் கோட்டை எங்கே?" என்று கேட்டார்கள். மார்பின்மேல் கை வைத்து "இங்கேதான்" என்று தைரியமாகப் பதிலளித்தான் நேர்மைப் பண்பு சோதனை காலத்திலேதான் சுடர் வீசி எழும். எவ்வகைச் சாதனங்களும் கைநழுவி விடும்போதும் அவன் தன் நேர்மையிலும் தைரியத்திலும் பிறழாமல் நிற்கிறான்.

லார்டு எர்ஸ்க்வன் என்பவர் தம் கொள்கைகளில் அசையாத உரிமை பூண்டவர். உண்மையின் உறுதிப் பிடியிலிருந்து விடுபடாதவர். அவர் எழுதிய ஒழுங்கு வழிகள் ஒவ்வொரு இளைஞனின் நெஞ்சத்திலும் பதிய வைக்கும் தகுதி வாய்ந்தவை. அவர் என் இளமையிலிருந்தே மனச்சாட்சி 'எது கடமை என்று உணர்த்துகிறதோ அதைச் செய்தலும், 'பலனைக் கடவுளிடத்தில் விடுதலும் முதலறிவுரையாக இருந்தது. இந்தப் பழக்கத்தை என் கல்லறைவரைக் கொண்டு செல்வதை நான் நம்புகிறேன். நான் இதுவரைக்கும் அதைப் பின்பற்றினேன். இந்தக் கொள்கைக்குக் கீழ்ப்படிவது ஒரு பிரத்யேகமான தியாகமென்று நான் கூறினால் அது பழிப்பதற்குக் காரணமில்லை. அதற்கெதிராக முன்னேற்றத்திற்கும் செல்வாக்கிற்கும் இது பாதை என்று கற்றுக் கொண்டேன்; என் பரம்பரை இதைப் பின்பற்றுமாறு குறிப்பிடுவேன்.

ஒவ்வொரு மனிதனும் உயர்ந்த பண்புடையவனாக இருப்பதை வாழ்க்கையின் உயர்ந்த நோக்கமாகக் கொள்ளவேண்டும். அதைத் தகுதியான முறைகளில் அடைவதற்கு முயற்சி செய்தலாகும். நம்மால் ஓரளவு அடைய முடியாமற் போனாலுங்கூட உயர்ந்த முறையில் வாழ்வதைப் பற்றி எண்ணவேண்டும். டிஸ்ரேலே என்பவர் உயர நோக்கமில்லையெனில் எவனும் தாழ்ந்த நிலை யடைவான். எந்த உணர்ச்சி கிளர்ந்தெழுவில்லையோ அந்த உணர்ச்சி கல்லறையிலுங்கூட அமிழ்ந்துசெல்லலாம் என்கிறார். ஜார்ஜ் ஹெர்பர்ட் என்பவர் அழகிய பாட்டாக உயர்ந்த அறிவுரையோடு ஒன்று எழுதுகிறார். உன் நடத்தையில் பண்புடையவனாகவும் திட்டங்களில் உயர்ந்தவனாகவும் இருக்கவேண்டும். உணர்ச்சி வெள்ளத்தில் அமிழ்ந்துவிடாதே. எவனொருவன் உயர்ந்த முறையில் வாழவும் எண்ணவும் கற்றுக் கொள்கிறானோ அவன் வாழ்க்கையில் ஒரு நோக்கமில்லாதவனாகி — உயர்ந்தவனாகவே வாழ்கின்றான். ஸ்காட்லாந்திய பழமொழி ஒன்று: பொற்குவியலைக்

மைப்பற்ற எண்ணிருல் அதில் ஒரு சிறுபகுதியாகிலும் அடைவான் என்று கூறுகிறது. உயர்ந்த பயன்களுக்கு எவனொருவன் ஆசைப்படுகிருனோ அவன் தன் வாழ்வைத் தொடங்கிய காலத்திலிருந்து சிறிது அதிகமாகவே முன்னேறச்செய்வான். அவன் குறிவைத்த இடத்தை அடையாமற் போனுலுங்கூட தன்னை உயர்த்திக்கொள்ள வேண்டும் என்ற முயற்சியே நிலையான பலனைக் கொடுக்கும்.

கர்னல் சார்டீஸ் என்பவர் யோக்கியதைக்காகப் புகழ்பெற்ற ஒருவனைப் பார்த்து நான் உன்னுடைய நல்லபெயருக்காக 1000 பவுன்கள் வழங்கவேண்டுமென்ருர். அதைப் புரிந்துகொள்ள முடியாது ஏனென்றுகேட்டான். நான் அதைக்கொண்டு 10000 பவுன்கள் லாபமடைய முடியுமென்று விடை பகர்ந்தார்.

சொல்லிலும் செயலிலும் உள்ள நேர்மைதான் பண்புடைமையின் முதுகெலும்பு. தலைமையான அதன் அடையாளமாக இருப்பது உண்மையை மிக நம்பிக்கையுடன் கடைப்பிடிப்பதேயாகும். சர். ராபர்ட்பீல் என்பவர் இறந்த சில நாட்களுக்குப் பின் பொதுமக்கள் சபையில் அவரைப் பாராட்ட விரும்பிய வெல்லிங்டன் கோமகனர் "ராபர்ட் பீலின் கண்ணியமான பண்புடைமையை பிரபுக்களாகிய நீங்கள் உணரவேண்டும். மன்னரின் அரசியல் சபைகளில் நாங்களிருவரும் இருந்தோம். அவருடன் ஒப்பற்ற நட்புறவைக் கொண்டாடிய நான் எல்லாத் துறைகளிலும் அவரைப்போல் உண்மையிலும் நியாயத்திலும் நான் அதிகமாக நம்பிக்கை கொண்டிருந்த ஒரு மனிதனைக் கண்டதில்லை." என்ருர்.

ஒரு அமெரிக்க கனவான் க்ரான்வில் ஷார்ப் என்பவரின் உயர்ந்த பண்புகளைப் பாராட்டுவதற்காகத் தன்னுடையமக்களில் ஒருவனுக்கு அவர் பெயரை வைத்தாகக் குறிப்பிட்டு அவருக்கு எழுதினர். அக் கடிதத்தைக் கண்ட அவர் "நீ யாருடைய பெயரை உம்மகனுக்கு வைத்தீரோ அவருக்கு அவருடைய குடும்பத்தின் பெயர்போன ஒரு கொள்கையைக் கற்றுக்கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். அது நீ எவ்வாறு தோன்ற வேண்டுமென்று விரும்புகிருயோ அவ்வாறிருக்க முயற்சி செய் என்பதாம். இக் கொள்கையின் பாதையை என் தந்தை கூறிய வாறு அக்கரையாகவும் பணிவாகவும் பின்பற்றினேன். அதனுல் தான் சாதாரணமாகவும் யோக்கியமான மனிதனுகவும் பொது வாழ்விலும் தனித்த வாழ்விலும் ஒரு குறிப்பிடத்தக்க செய்தியாக மாறியது என்று எழுதினர். பொர்னூர்டு என்பவர் அறிவு மிகுந்தவர். ஆனுல் நேர்மையில்லா வழக்கறிஞர். அவரிடம் ஒரு தரம் கிராம்வெல் என்பவர் "நீர் உமது நடத்தையில் மிகவும் வேறுபாடுடையவராக நான்

உணர்கிறேன். இத்தகைய வாழ்வைப்பற்றி அதிகமாக தன்னம்பிக்கை வேண்டா. தந்திரம் உம்மை ஏமாற்றலாம்; ஆனால் நேர்மை உம்மை எப்போதும் ஏமாற்றாது" என்று குறிப்பிட்டார். யார் தம் சொற்களுக்கு வேறுபாடாக நடந்துகொள்கிறார்களோ அவர்கள் பெருமை பெறமாட்டார்கள். அவர்கள் சொற்களுக்குக் குறைவானமதிப்புத்தானிருக்கும். உண்மை உதடுகளில் மட்டுந்தான் நர்த்தனமாடும்.

உண்மைப் பண்பு மறைமுகமாகவோ வெளிப்படையாகவோ சரியாகவே நடைபெறுகின்றது. ஒரு இளைஞனை "அம்மரத்திலிருந்து சில கனிகளை ஏன் நீ கொண்டுவரக் கூடாது?" என்று ஒருவர் கேட்டார். இருவருக்கும் அங்கு ஒருவருமில்லையென்று தெரியும். இருந்தாலும் அவன "அங்கு ஒருவர் இருந்தார். நானே என்னைக் கண்காணிக்க இருந்தேன். யோக்கியதையற்ற ஒரு செயலைச் செய்வதற்கு என் மனச்சாட்சியின் முன்னாலேயே என்னால் செய்ய முடியவில்லை. இது வாழ்வை ஒழுங்குபடுத்தும் நடைமுறையிலுள்ள ஒரு ஆற்றல். நாளுக்குநாள் ஒவ்வொரு மணியிலும் இந்தத் திட்டம் பண்புடைமைக்கு மெருகு கொடுக்கிறது. அது ஒவ்வொரு விநாடியும் செய்முறைப் படுத்துகின்ற ஒரு சக்தியாகவும் விளங்குகின்றது. ஆட்சி செலுத்தக்கூடிய இத்தகைய அதிகாரத்தைவிட பண்புடைமைக்கு வேறு பாது காப்பு இல்லை. குற்றவாளியின் தவிர்க்க முடியாத நீதிபதி இதுவேயாகும்.

இவ்வாறெல்லாம் சாமுவெல்ஸ் மைல்ஸ் தம் கட்டுரையில் மிக அழகாகத் தெளிவுபடுத்துகிறார்.

அறிவுக் கதிர்

"அன்று எழுதிய எழுத்து" பலப்பல நாடுகளிலே அழித்தெழுதப்பட்டிருக்கிறது—அபலால் அல்ல—ஆற்றல் மிக்க வீரர்களால்! இயங்கும், விதி, விரைவில் ஒழியத்தான் போகிறது.

வாலிபர்கள் உரிமைப் போர்ப்படையின் ஈட்டி முனைகள், நடமாடும் எஃகுக் கம்பிகள். அவர்கள் அகத்திலே ஆர்வமும், முகத்திலே வீரக்களையும், செயலிலே துடிதுடிப்பும் காணப்படும்.

தோழமை! ஆழ்ந்த கருத்துள்ள அழகான சிறு சொல். பேதம் நீங்கிய அல்லது நீக்கப்பட்ட நிலை அல்ல, பேதம் ஏற்படாத நிலை—ஏற்பட முடியாத நிலை. தோழமை!

"மங்கா ஓவியம்"

உயர்நிலைப்பள்ளிக் கதைப் போட்டியில் முதல் பரிசுபெற்ற கதை

எழுதியவர் : தி. க. அரங்கசாமி,
போர்டு உயர்நிலைப் பள்ளி, தருமபுரி, சேலம்.

"விதி என்ற சுழன்று வீசும் சூறாவளியில் சிக்கிச் சிறு துரும்பாகச் சுழல்கிறது உலகம். அதிலே ஆதரவற்று அனாதையாக விளங்கிய அவளை அணங்குகளின் உள்ளத்தில் அழியாத ஓவியமாக்கி விடுகிறது அந்த விதி!"

பொங்கி வரும் நீரினின்றும் கிளம்பிய அலைகள் ஒன்றன்பின் ஒன்றாக முன்னோக்கி வந்து கரையில் மோதிவிட்டுப் பின்னோக்கிச் சென்று கொண்டிருந்தன. அலையினின்றும் சிதறிய நீர்த்துளிகள் மாலையிளம் வெயிலில் முத்துக்களைப் போன்று பளபளத்தன. இடையிடையே துள்ளுகின்ற மீன்களைப் பிடிக்க முயன்று தோல்வியடைந்து நிராசையுடன் நீரைப் பார்த்துக்கொண்டு கிடக்கும் நீர்ப் பறவைகளைப் பார்த்துச் சிரிப்பன போன்று அலறிக் கொண்டிருந்தன ஆந்தைகள்.

ஆற்றின் கரையோரமாக நீண்டு வளர்ந்திருந்த மரங்களின் இடையில் செல்லும் ஒற்றையடிப் பாதை வழியாகப் போய்க் கொண்டிருந்தது ஒரு கூட்டம். முன்னே சிலர் பிண ஒலிக்குறி குறியாய் ஒலிக்கும் பணியை அடித்துக்கொண்டு செல்ல அதன்பின் ஒரு பெண் கும்பல் குமுறிக்கொண்டு சென்றது. அதன் நடுவில் நன்றாக அலங்கரிக்கப்பட்டுக் கடைந்தெடுத்த தந்தச் சிலைபோன்ற பெண் ஒருத்தி—கணவனை இழந்து அவன் கட்டிய உரிமைப் பரிசையும் இழக்கச் சென்று கொண்டிருக்கும் விதவை—கண்ணான தன் கணவன் காலன் வாயில் விழுந்து விட்டானே, கண்ணீரில் தானே கழிய வேண்டும் தன் வாழ்க்கை என்றெண்ணிக் கண்ணீர் விட்டுக் கதறுகின்றாள் எதிர்கால வாழ்வின் இருட்டறையை நோக்கி. இருட்டறை யில்லாமல் இன்ப வாழ்வையா வழங்கப் போகிறது இச் சமுதாயம்!

அக்கூட்டம் செழித்து வளர்ந்திருந்த தோப்பினுள் புகுந்தது. சாவு மணி அடித்தது. சடங்குகள் ஆரம்பமாயின. அவள் சுக வாழ்வைச் சுட்டுப் பொசுக்கும் சுலோகம் சுழன்றோடி வந்தது. அவளை வறண்ட பாலைவனத்தில் நெட்டித்தள்ளும் நெஞ்சழுத்தக் காரர்கள், உற்றார் எனப் பெயர் வைத்துக்கொண்டு அந்தப் பெண்ணின் வாழ்க்கைக்கே உலை வைக்கும் உலுத்தர்கள் நீலிக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தனர்.

அதையடுத்து ஆற்றுக்கு அவ்வணங்கை அழைத்துச் சென்றனர். அவள் அலறினாள். இதையெல்லாம் கண் இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்த மங்க

ளாவின் கண்கள் தாமாகவே மூடிக்கொண்டன. பெண்களின் புலம்பல் காற்றில் விட்டுவிட்டு மிதந்து வந்தது.

மறுபடியும் கண்களைத் திறந்த போது களையிழந்து, கட்டிழந்து, வாழ்விழந்து வந்துகொண்டிருக்கும் வனிதையைத்தான் கண்டாள். மங்களா நீர் மல்கிய கண்களுடன் எதிரே நின்றிருந்த சுகுணாவைப் பார்த்தாள். இரண்டுதுளி கண்ணீர் தரையில் விழுந்து சிதறியது.

"சுகுணா......" அவள் குரல் தழுதழுத்தது.

"என்ன மங்களா..." என்று கேட்டாள் சுகுணா. அவளுக்கு மட்டும் இதயமில்லையா என்ன?

"சுகுணா ....அப்பெண்ணின் கணவன் இறந்துவிட்டான். ஆயினும் தளிர் உடலை இழக்கவில்லை. தன் தாலியைத்தான் இழந்தாள் ......இளமையை இழந்து விடவில்லை. அவள் புதுவாழ்வு பெற்று வாழ வழி செய்வதே என் இலட்சியம்..." என உறுதியுடன் கூறினாள்.

"அதுமட்டும் முடியாது மங்களா! அப்படி முயன்றாலும் சமூகம் உன்னைச் சும்மாவிடாது. சீறி உன் வாழ்வைச் சிதைத்துவிடும்."

இதைக் கூறிவிட்டு லேசாக முறுவலித்தாள்.

"சுகுணா அதைப்பற்றி யெனக்குக் கவலையில்லை, உண்மையு எடுத்துக் கூறிய எத்தனையோ பெரியார்களின் வாழ்வையே சிதைத்து விட்டது இச்சமுதாயம்! சீர்கெட்ட பிரான்சு நாட்டிலே சமத்துவத்தை நிலைநாட்ட முயன்ற நெப்போலியன் எப்படி மாண்டான்? அமெரிக்க நாட்டின் அடிமைத்தனத்திற்கு அழிவு மணியை அடித்து அமரத்துவத்தை நிலைநாட்ட முயன்ற அப்ரஹாம் லிங்கனின் காலம் எப்படி முடிந்தது? அகிம்சையினால் உலகை அன்பு வலையில் பிணிக்க முயன்று கொண்டிருந்த மகாத்மாவைக் கொன்றது யார்? தாய் நாட்டின் விடுதலைக்காகப் போராடி வறுமையை அணைத்து வாழ்விழந்த வ. உ. சிதம்பரனார் எப்படி உயிர் துறந்தார்? அப்படி இருக்க நான் ஏன் இச்சமுதாயத்தைக் கண்டு அஞ்சவேண்டும்! சில நாட்களுக்கு முன் எந்தச் சமுதாயம் அவளை எவனுக்கு மாலையிட வைத்து மணமகளாக்கி மகிழ்ந்ததோ, அதே சமுதாயம் இன்று அவள் தாலியை அறுத்துவிட்டுத் தானும் சேர்ந்து கதறுகின்றது. எந்தச் சாத்திரங்கள் நேற்று வரையும் சாதகமாக இருந்ததோ அதுவே இன்று அவளைக் கைம்பெண்ணாக்கித் தனிச் சட்டமியற்றி அவள் உள்ளத் தாசையை எல்லாம் தரை மட்டமாக்கியது. அதற்கு முடிவு கட்ட......"

"என்ன செய்யப் போவதாக நினைக்கிறாய் மங்களா...?" என்றாள் சுகுணா.

"நினைப்பதென்ன... இனி என் உடலில் உள்ள ஒவ்வொரு இரத்தத் துளியும் பெண்களின் முன்னேற்றத்திற்காகவே பயன்படுத்தப்படும். பெண் இனத்தில் பூட்டப்பட்டிருக்கும் ஒவ்வொரு வகை விலங்கையும் தகர்த்தெறிவதுதான் என் எண்ணம்" என்று கூறிவிட்டு மாடிப் படிகளின் வழியாக இறங்கிச்சென்றுவிட்டாள் மங்களா. இவ்வளவையும் கேட்டுக் கொண்டிருந்த சுகுணா பெருமூச்சு விட்டவாறு சோபாவில் சாய்ந்தாள்.

சிறு வயதிலேயே பெற்றோரை இழந்து அநாதையாக விளங்கிய மங்களாவை ஓர் அநாதை விடுதி அடைக்கலம் அளித்து அணைத்துக் கொண்டது. அதன் ஆதரவிலே வளர்ந்து M. B. B S. பாஸ் செய்துவிட்டு அவள் டாக்டர் பட்டமும் பெற்றாள். சிறு வயதிலே தனிமையையும் மோனத்தையுமே விரும்பியது அவள் உள்ளம். இயற்கையின் எழிலைக் காண்பதையும் வானத்தின் எல்லையில்லாத சூனியப் பிரதேசத்தைக் காண்பதையும் ஏனோ அவள் மனம் பெரிதும் விரும்பியது. தன்னைப் போன்ற பெண்கள் பிச்சை எடுப்பதைக் காணும்போது அவள் கண்கள் கலங்கும். சில சமயம் கதறி அழுதும் விடுவாள். பெண்களைக் கொடுமைப் படுத்துவதுபோன்று எழுதியுள்ள நூல்களைப் படிக்கும்போது அவர்கள் படும் இன்னலை நினைத்துக் கண்ணீர் உகுப்பாள். அடிமைத்தனம் பெண்களிடத்தில்தான் பெரும்பாலும் உள்ளதென்றெண்ணிப் பெருமூச்செறிவாள். அறிவற்ற சிறுமிப் பருவத்திலிருந்து பருவம் என்ற போர்வைக்குள் மாறும்போது பெற்றவர்களுடைய கட்டுத் திட்டங்களுக் கடங்கியிருந்து மணமானபின் கணவனுடைய அதிகாரத்திற் கடிமைப்பட்டு அவன் மாண்டதும் சமூகத்தினுடைய—அது வகுத்துள்ள—வழிப்படி நடக்கவேண்டும். இதிலிருந்து தவறினால் 'விபசாரி" "வாழாவெட்டி" "சூனியக்காரி" எனப் பெயர்களைச் சூட்டி மகிழும் சமுதாயத்தைக் கண்டு அவள் உள்ளம் எரியும்.

அழகுள்ள மலர்; அன்று மலர்ந்தது. அதன் மணம் எங்கோ ஓடிக்கொண்டிருக்கும் வண்டின் பார்வையைத் தன் பக்கம் திருப்புகின்றது. எட்டச் சுற்றுகிறது வண்டு. மலரின் இதழ்களில் நாணங் கலந்த புன்னகை பாய்ந்து செல்லுகிறது. அம்மலர் நாணத்தால் தலை குனிந்து கடைக் கண்ணால் பார்த்தது. அந்த வேல்விழிப் பார்வையைப் பொறுக்க மாட்டாமல் மயக்கத்தில் மலரிழையாளின் கையைப் பற்றியது. முதலில் பயந்தது. பிறகு பரிதாபகரமாகப் பார்த்தது காதலனை. அப்பார்வை 'என்னைக் கைவிட மாட்டீரே' என்று கேட்பது போலிருந்தது. 'உன்னையா' என்று கூறி அருகில் உட்கார்ந்தது. சிறிது நேரம் அமைதி. பிறகு நான், போய் வரட்டுமா' என்று

நகையிட்டுக் கொண்டே எழுந்தது வண்டு.

"மறந்து விடாதீர்—கைவிட்டால் கதியில்லை" என்று கூறுவது போலிருந்தது மலரின் நிலை. வண்டு ஓடிவிட்டது....வசந்தமும் ஓடிவிட்டது. கண்ணீர் மல்கிய விழிகளுடன் இருளில் ஏங்கிக் காத்துக் கிடந்தது மலர். அதன் உடல் அழகு மறைந்தது. முதுமை குடிகொண்டது. மறு நாள் காலையில் அம்மலராளின் காதலன் வந்தான். ஆவலுடன் எதிரழைக்க வாயைத் திறந்தது மலர். ஆனால் வண்டின் முகம் ஒரு முறை சுருங்கி விரிந்தது. அதன் நோக்கம் அருகிலிருந்த வேறொரு மலரின்மீது விழுந்தது. அவ்வளவுதான்! மறு கணம் புதுமலரை வட்டமிட்டு அதை நெருங்கியும் விட்டது. 'ஐயோ' என்றலறியவாறு கண்களை மூடிக்கொண்டது வாடி, வடிவிழந்து, வாழ்விழந்த அந்த மலர். அதற்குத்தான் நின்றிருந்த இடமே—ஏன்! உலகமே சுற்றுவதுபோலக் காட்சியளித்தது. அடுத்த வினாடி மலர் செடியினின்றும் கீழே விழுந்தது. மறுபடியும் கண் விழித்த போது தரையில் விழுந்து கிடப்பதைக் கண்டு வருந்தியது. அதற்கு முன்பே வாடி விழுந்திருந்த மலர்கள் அம்மலரைக் கண்டு சிரித்தன, "நீயும் இப்படியா?" என்று. அதைக் கண்டு தலை குனிந்தது அம்மலர். அதன் இதழ்களில் வறண்ட புன்னகை யொன்று இழைந்தோடி மறைந்தது. இப்படி ஒரு ஆசிரியர் பெண்ணின் வாழ்க்கையை மலரினுடன் ஒப்பிட்டுக் காட்டுகிறார். மலரினின்றும் மங்கை எந்த விதத்திலும் வேறு பட்டவள் அல்லள் என்பது அவருடைய கருத்து—இதைப் படித்த அவள் கண்கள் நீரைக் கக்கும். கருணையினாலல்ல! ஏழ்மையில்.

சிறு வயதிலேயே அழகுடன் விளங்கிய மங்களா பருவப் போர்வைக்குள்ளே புகுந்தபின் அழகுச் சிலையாகக் காட்சியளித்தாள். அவள் அழகைக் கண்டு மோகங்கொண்ட இளங் காளைகள் முன் வந்தும் அவர்களை அவள் மனம் விரும்பாமல் பொதுச் சேவையில் ஈடுபட்டது. அப்போதுதான் அகதிகளுக்குத் தொண்டாற்ற ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் திரண்டு சென்று கொண்டிருந்தனர். அவர்களில் அவளும் ஒருத்தியாகச் சென்று கொண்டிருந்தாள்.

அகதி முகாமுக்கு வந்ததிலிருந்து எல்லா வேலைகளையும் அவளே மேற்கொண்டாள். அடிபட்டு அவதியுற்று வந்து நிற்கும் அகதிகளுக்குக் கட்டுக் கட்டுவது முதல் அவர்களுக்கு உணவு பரிமாறுவது வரையில் யாவும் அவள் இலாகாவைச் சேர்ந்தவை. அதில் அவளுக்குத் தனி உற்சாகம், எல்லை கடந்த அன்பு, ஏன்—அதைப் பெருமையாகவே மதித்து அதன்படியே நடந்து வந்தாள். இதனால் அகதிகளுடைய உள்ளத் திரையிலே மங்கா ஓவியமாகத் திகழ்ந்தாள் அவள்.

காலச் சக்கரத்தடியில் மூன்று வருஷங்கள் சிக்கிச் சிதைந்து சீரழிந்து போயின. "விதி" என்ற சிற்பி சிறந்த கல்லொன்றைத் தேடிக் கொண்டிருந்தான். கடைசியாக நல்ல கல்லும் கிடைத்து விட்டது. அதை உருவாக்குவதில் முனைந்துவிட்டான். காலம் என்ற உளியினால் புகழ் என்ற சிறல்களை உண்டாக்கிக் கொண்டிருந்தான்.

வெளியே நிலவு காய்ந்து கொண்டிருந்தது. ஒளி வெள்ளமிட்டோடியது. இரவின் அமைதியைக் கிழித்துக் கொண்டு யமுனையின் கரையிலிருந்து பாடும் கவிஞனின் கானம் காற்றில் மிதந்து வந்தது. மாடிச் சுவர் மீது அமர்ந்த வண்ணம் பாட்டில் ஈடுபட்டுத் தன்னை மறந்திருந்த சுகுணா தன்பெயரைச் சொல்லி யாரோ அழைப்பதாகக் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். எதிரே மங்களா நின்றுகொண்டிருந்தாள்.

"ஏன் சுகுணா ஆள் வருவது கூடத் தெரியவில்லையே... அங்கே என்ன செய்கிறாய்..."

"ஓ...மங்களாவா! எப்போது வந்தாய்?... இப்படி வாயேன்...' எனக் கூவியவாறு ஓடி வந்த சுகுணா மங்களாவுக்குப் பின் நின்றிருந்தவர்களைக் கண்டதும் திடுக்கிட்டாள். அவள் ஏறிட்டுப் பார்த்தாள் மங்களாவை. அவள் முகத்தில் படர்ந்திருந்த சுருக்கத்தைக் கண்டவுடன் லேசாக முறுவலித்தாள்.

"சுகுணா...எனக்குப் பிறகு... இப்பணியை நீதான்..." இதைக் கூறி முடிக்கு முன்பே அவள் தலை சாய்ந்து விட்டது. கூட்டை விட்டு உயிர் பறந்து சென்று விட்டது.

விதியின் இதழ்களில் இன்பப் புன்னகை இழைந்தோடி மறைந்தது. அவள் எதிரில்—அழகுச் சிலை—புகழ்ச்சிலை— மங்களாவின் சிலை சிரித்துக்கொண்டு நின்றது. அதன் கண்களில் கருணை வழிந்தது.

"சுகுணா இவர்களை யாரென்று தெரிகிறதா!... இவர்கள் தான் காந்தி கண்ட கனவை நனவாக்கியவர்கள்,' என்று கூறிவிட்டு அலைந்துகொண்டிருந்த கூந்தலைச் சரி செய்தாள்.

"புரியவில்லையே!..." அவளுக்கு வியப்பாயிருந்தது அவள் கூறியது.

"அது தான் சுகுணா...ஒவ்வொரு மாணவனும் ஒரு விதவையை மணக்க முன் வரவேண்டும் என்று கூறிச் சென்றாரே அதைத்தான் கூறுகிறேன். இந்த விதவா விவாகத்தை வைதீகம் எதிர்த்தது! சனாதனம் சாடிற்று! கையால் ஆகாதவர்கள் வீண் பேச்சாடினர்...கோழைகள் பின் வாங்கினர்...அறிவாளிகள் அகமகிழ்ந்தார்கள் உயிரையே பணயமாக வைத்துப் போராடினேன். உண்மையைக் கூறி நேர்மையை நாடினேன்...முடிவில்...

"வெற்றி நமக்குத்தான் என்று சொல்லேன்! மேற்கொண்டு என்ன செய்யப் போகிறாய்..."

"நாளைக்குப் பாரேன்...."

மறு நாள் சுகுணா அவளுடன் சென்று கண்டது ஆயிரக் கணக்கான பெண்களை ஆதரவளித்து அணைத்துக் கொண்டுள்ள புது ஆஸ்ரமத்தைத்தான். வாழ்விழந்து வருந்திச் செல்பவர் மரணத்தின் மடியில் அமைதியைக் கண்டனர். ஆனால், இங்கு அவளுடைய அன்பின் அணைப்பில் அனைவருமே அமைதி கண்டனர். அவளுடைய இடைவிடாத உழைப்பினால் ஒவ்வொருவரும் புது வாழ்வு பெற்றனர்.

இப்போது சிற்பி விரைவாகச் செதுக்கிக் கொண்டிருந்தான். உளி பட்ட இடமெல்லாம் கலைக் கதிர் வீசியது. சிலை பாதிக்கு மேல் உருவாகி விட்டது.

இப்போது மங்களா ஓரிடத்தில் தங்குவதில்லை. எங்குப் பார்த்தாலும் அமோகமான ஆதரவும் அழைப்பு மாகக் குவிந்து கொண்டிருந்தன. அழகு அழிந்தது; புகழ் வளர்ந்தது. அவள் முயற்சியினால் பெண்கள் சொத்துரிமை பெற்றனர். சுதந்திரம் பெற்றனர். கல்விச் சாலைகள் பல திறக்கப்பட்டன. பெரும்பாலான பெண்கள் கட்டாயக் கல்விக்கு உட்பட்டுப் பலவகைக் கலைகளும், விஞ்ஞானமும், போர்முறையும் பயில்விக்கப்பட்டனர். பெண்கள் ஆண்களுக்கு எந்த விதத்திலும் அடிமைப் பட்டவர்களல்லர் அன்பின் அடிமையைத் தவிர. பிச்சைக்காரர்களைக் கைத்தொழிலில் ஈடுபடும்படி செய்தாள். காலமும் ஓடிக்கொண்டிருந்தது.

கல் செதுக்கும் ஒலி அலைகள் வெளிவந்து கொண்டிருந்தன. சிலை அநேகமாக முடிந்துவிட்டது. கண்களை மட்டும் திறக்க வேண்டும். காலதேவனின் கைகள் சிலையின் கண்களைத் திறப்பதில் முயன்றுகொண்டிருந்தன.

ஒரு பெரிய இருமல்... அதைத் தொடர்ந்து எச்சிலை வெளியே துப்பினாள் மங்களா. அதில் இரத்தம் கலந்திருந்தது!... ஆம் கன்னிகளின் உயர்வை நாடி காசநோயைக் கட்டியணைத்துக் கொண்டாள். அக் கற்புக்கரசி! இடைவிடாத உழைப்பினால் இளமை அழிந்தது... தளிர் உடல் எலும்புக் கூடாகக் காட்சியளித்தது. மான் போன்ற மருண்ட பார்வையையுடைய கண்கள் மங்கி ஒளியிழந்திருந்தன.

கட்டிலில் நிலை கொள்ளாமல் துடித்துக் கொண்டிருந்தது அவள் உடல். அதனருகே கவலை தோய்ந்த முகத்துடன் நின்று கொண்டிருந்தாள் சுகுணா. டாக்டர்கள் நம்பிக்கையிழந்து உதட்டைப் பிதுக்கிவிட்டுச் சென்றனர். திடீரென்று மங்களாவின் கண்கள் மிரள வாரம்பித்தன. அவள் உதடுகள் துடித்தன ஏதோ சொல்ல.

"மங்களா...உன் உயிரையும் மதியாது மாதரின் முன்னேற்

(42-ம் பக்கம் பார்க்க)

அடைவோம் உரிமையை !

(க. சோமசுந்தரம், துணைச்செயலாளர், பல்லடம் வட்ட
ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கழகம்.)

பலமான ஒற்றுமையே நம்மைப் பாதுகாக்கும் அரண்!
ஆரம்பப்பள்ளி ஆசிரியத் தோழர்களே! தோழியர்களே!

நாட்டின் எதிர்கால நன்மக்களை உருவாக்கும் பெரும் பொறுப்பிலே முனைந்துள்ள நாம், வாழ்க்கைத் தரத்திலே வறண்டு, அரசியல் துறையிலே அடிமைப்பட்டு, பொருளாதாரத் துறையிலே புதைக்கப்பட்டு, மக்கள் மத்தியிலே மதிப்பிழந்து உண்ணப் போதிய உணவும், உடுக்கப் போதிய உடையுங்கூடக் கிடைக்கப் பெற இயலாத அவல வாழ்வு வாழும் இந்த இழி நிலைமைக்கு வரக் காரணம் என்ன?

'ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு' எனப் போதிக்கும் நாம் ஒன்றுபட மறந்தோம்.

'முயற்சி திருவினையாக்கும்' என்று தினமும் வலியுறுத்தும் நாம், நம் இழிநிலை போக்க முயற்சிக்க மறந்தோம். 'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?' என ஓதி வைக்கும் நாம் ஊழ்வினை, மாற்ற ஒருவராலும் ஆகாது, என்ற உலுத்த எண்ணத்தை நம்பி, ஊக்கத்தோடு உழைக்க உற்சாகம் குறைந்தோம்.

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார் திண்ணியராகப் பெறின்" என்று வலியுறுத்திக் கூறிய அறத் தமிழன் வழிவந்த நாம், வாழ வழி தேடாது வாடி வதங்குகின்றோம்! நமது குறைகளை எடுத்துக்கூறி, நமது உரிமைகளை வலியுறுத்த நமக்குள் ஒன்றுபட்ட அமைப்பு இல்லை. இருக்கும் ஒரு சிலவும் தனித்தனி நிர்வாகங்களில் உழைக்கும் ஆசிரியர்களைக் கொண்ட தனித்தனி அமைப்பைக் கொண்டது. ஆகவே அந்த அமைப்புகளால் எந்தக் காரியங்களையும் சாதிக்க இயலாமல் இருக்கிறது. நிர்வாகப் பிரிவினைகள் பாராமல் எல்லா ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களும் சேர்ந்து அமைக்கும் கழகங்களே பயனுள்ள பணிகள் ஆற்ற இய

(41-ம் பக்கத் தொடர்ச்சி)

றத்திற் குழைத்த மங்கை நல்லாளே!...நீ தமிழ் நாட்டு மக்களின் உள்ளத்திலே ஓர் ஒப்பற்ற இடத்தைப் பெற்றுவிட்டாய். மாதர்களின் உள்ளத் திரையிலே அழியா இடத்தைப் பெற்று மங்கா ஓவியமாகத் திகழ்கின்றாய்! அதுவே என் மகிழ்ச்சி", என்று நீர் மல்கிய விழிகளுடன் அவள் சவத்தின் முன் மண்டியிட்டு வணங்கினாள் சுகுணா. தென்றல் தீந்தமிழ் பாடித்தன்பரிவைக் காட்டிச் சென்றது. நிலவு மேகத்துள் மறைந்தது. 'மங்களா... மங்களா..." என்று அழைப்பதைப்போல குயில் கூவிக் கொண்டிருந்தது.

(மாணவர் மன்ற வெளியீடு)

னும். நமக்குள் பிரிந்திருப்பது பெரும் ஆபத்து! சேர்ந்து செயல் புரிவதே நம் உரிமைகளை அடையச் சிறந்த வழி! ஆகை யால் அந்தந்த வட்டத்திலே உள்ள பலதரப்பட்ட நிர்வாகங் களாலும் நடத்தப்படும் ஆரம்பப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரி யர்கள் - அனைவரும் ஒன்று சேர்ந்து வட்ட (தாலூக்கா)க் கழகம் அமைத்து அதன் பிரதி நிதிகளைக் கொண்டு, மாவட்ட, மாநிலக் கழகங்களை அமைக்க உட னடியாக முயற்சி செய்யுங்கள். அதற்காக ஆங்காங்கே உள்ள ஆர்வம்மிக்க ஆசிரிய இளைஞர்கள் தீவிரமாக முயற்சியை மேற் கொள்ளுங்கள்! முதிர்ந்த ஆசிரி யர்கள் அவர்களுக்கு உதவியாக இருந்து உணர்ச்சி யூட்டி வழி காட்டுங்கள்! இந்திய அரசியல் சட்டம் 19ஆவது விதிப்படி நாம் நம் சமுதாய முன்னேற்றத்துக் காகக் கழகம் அமைத்துச் செயல் புரிய உரிமையுண்டு.

ஆகவே விழித்தெழுங்கள்! தோழர்களே விழித்தெழுங்கள்!!

வெங்கொடுமைச் சாக்காட்டில் வெம்பி வாழும் நம் சமுதாயத் தின் வீழ்ச்சி கண்டு எழுச்சி யுறுங்கள்! அன்றாடக் கஞ்சிக்கே அல்லலுறும் நம் அவல நிலைமை யைத் தகர்த்தெறிய ஆர்வம் கொள்ளுங்கள்! சீரழிந்த நம் வாழ்வைச் செப்பனிட யாவரும் சீறி எழுங்கள்!

'ஓடமாக வாழும் அவல வாழ்வை ஒழித்து நாமும் உயர்வு காண வேண்டும்! ஏணியாக வாழும் இழி நிலைமையை மாற்றி நாம் ஏற்றம் அடையவேண்டும்! கழகத்தால் என்ன சாதிக்க இய லும் என்ற கருத்தற்ற எண்ணத் தைக் கனவிலும் நினையாதீர்கள்! கழகம் பலமடைந்தால் நாம் சாதிக்க இயலாத காரியமும் இருக்காது என்று உறுதிகொள் ளுங்கள்!

ஆகவே ஆங்காங்குள்ள ஆசிரி யத் தோழர்கள் அனைவரும் பிரி வினை எண்ணத்தை உதறித் தள்ளிவிட்டு எல்லா ஆசிரியர் களும் கொண்ட வட்ட (தாலூ கா)க் கழகம், மாவட்டக் கழகம் மாநிலக் கழகங்கள் அமைத்து நம் ஒற்றுமையைப் பலப்படுத்தி நம் கடமையை ஆற்றுவோம்! கடமையின் முடிவிலே அடை வோம் உரிமையை!

வணக்கம்.

EDUCATIONAL CONCESSIONS

Education-concessions to Children of Non-gazetted Officers and Others - Orders issued.

G. O. No. 1250, Education, dated 31st May 1952 :-

The Government direct that with effect from the school year 1952,-53, certain educational concessions as laid down in this order, be granted to the children of all non-gazetted employees of the State. Government, all employees of local bodies drawing pay not exceeding Rs. 300 per mensem and all teachers employed in aided elementary schools and aided secondary schools. The concessions will be restricted to the sons and daughters of the classes of employees mentioned above and will not be extended to their relatives or dependants. Pensioners, village officers or casual workers who are paid wages at current market rates and who are not employed regularly, will not be included in the scope of the concessions.

2. The concessions in the case of the children of these employees will be by way of the remission of full tuitionfees in the case of those studying in elementary chools and in secondary chools up to and inclusive of Form III and by way of the remission of one half of such fees of those studying in the high school classes (Forms IV to VI of a secondary school.)

3. The concession will not apply to any of the special fees levied for ispecific purposes such as medical inspection, library, games, laboratory, etc.

4. Children already enjoying educational concessions up to the extent specified above, either as members of Backward communities or on grounds of poverty or for any other reasons, will not be given further concessions.

5. The fee income lost by the managements of aided elementary schools and aided secondary schools

as a result of the concessions in this order, will be made good to them in full.

6. One half of the fee income lost by the local bodies will be made good to them and the other half should be borne by local bodies.

7. The reduction in the fee income of local bodies should not be taken as an item of cost in reckoning the Government grant due to the local bodies.

8. The production of a certificate that the person claiming the concession is a non-gazetted employees of the Government or an employee of a local body or a teacher in an aided elementary or secondary school, should be insisted on, in all cases of grants of concession. In the case of employees of local bodies, the certificate should contain information about their monthly salary. The certificate shall be issued by the head of the office or institution in which the person concerned is employed.

(By Order of His Excellency the Governor)

K. M. UNNITHAN,

SECRETARY TO GOVERNMENT.

8-ம் பக்கத் தொடர்ச்சி

ரூ. 3 அனுப்பி மாதிரிப் பிரதிகள் கேட்கின்றார்கள். இது மிகவும் ஒழுங்கற்ற முறை.

ஒரு பாடசாலைக்கு ஒரு செட் மாதிரிப் பிரதிகள் அனுப்புவது தான் நியாயமும், ஒழுங்குமாகும். அப்படி ஒழுங்கற்ற முறையில் சில ஆசிரியர்கள் மாதிரிப் பிரதிகளுக்காக அனுப்பிய ரூ. 3-ன்றையும் ஸ்டாம்புகளையும் திருப்பி அனுப்பியிருக்கின்றோம். நாங்கள் மாதிரிப் பிரதி அனுப்பும் பாடசாலைகளையெல்லாம் ஜில்லாவாரியாக ரிஜிஸ்டர் செய்து வைத்துள்ளோம். ஆதலால் ஒரே பாடசாலையில் இரண்டு தடவை, மூன்று தடவை மாதிரி காப்பிகள் கேட்கும் தவறான முறையைக் கைவிடும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

S. S. L. C தேறிய ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கு ஓர் வேண்டுகோள்

(A. பிச்சையா. ஆசிரியர். H. E. S. துரைச்சாமியாபுரம். தென்காசி ரேஞ்சு)

நாம் செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக வேண்டுமென்றால் பிரைவேட்டாக செகண்டரி கிரேடு T. S. L. C பரீக்ஷை எழுதி அதில் தேர்வு பெற வேண்டும். ஆனால் 1945-ம் வருஷம் வரை நம் போன்ற ஹையர் கிரேடு ஆசிரியர்கள் S. S. L. C பாஸ் செய்தவுடன் அன்னாரின் சர்டிபிகேட்டுகளை செகண்டரி சர்டிபிகேட்டுகளாகச் சர்க்கார் மாற்றிக் கொடுத்து வந்தனர். அன்னார் செகண்டரி கிரேடு T. S. L. C பரீக்ஷை எழுதி பாஸ் செய்ய வேண்டியதில்லை.

இப்பொழுது நாம் அவ்வுரிமையை இழந்து நிற்கிறோம். இழந்த உரிமையைத் திரும்பவும் பெற நாம் விடாமுயற்சியுடனும் ஒற்றுமையுடனும் பாடு பட வேண்டும். நம்மில் பலர். 10, 15, 20 வருஷங்கள் வரை சர்வீஸ் உடையவர்களாயிருக்கிறோம். ஹையர் கிரேடிலும், S. S. L. C. யிலும் நல்ல மார்க்குகள் பெற்றிருக்கிறோம். நம் திறமைக்கு அவைகளே சான்று.

அப்படியிருந்தும் அரசாங்கம் நமக்கு மேலும் மேலும் பரீக்ஷை பரீக்ஷை என்று வைத்து நம்மை கஷ்டத்துக்கு உள்ளாக்குகின்றனர். இப்படிச் செய்வது நியாயமில்லை என்று பல கல்வி மகாநாடுகளில் அறிஞர்களின் தலைமையில் அநேக தடவைகள் தீர்மானங்கள் நிறைவேறியிருக்கின்றன.

ஆகையால் இதைக் கண்ணுறும் ஷை ஆசிரிய நண்பர்கள் ஒவ்வொருவரும் கீழே குறித்துள்ள விவரங்கள் அடங்கிய குறிப்பு தயார் செய்து அதை சென்னை "ஆரம்பக் கல்வி" ஆசிரியர் ஸ்ரீ P. வீரராகவன் அவர்கள் விலாசத்திற்கு அனுப்புங்கள். இதன் மூலம் இவ்வட்டாரத்தில் இந்நிலையில் உள்ள ஆசிரியர்களின் மொத்தம் தெரியும். நம்மவர் பிரதிநிதியாக ஒரு சிறு தூது கோஷ்டி கனம் கல்வி இலாகா டைரக்டர் அவர்களைப் பேட்டி கண்டு இந்த விஷயத்தை வற்புறுத்தினால் நன்மை பிறக்கும் என்பது என் தாழ்ந்த அபிப்பிராயம்.

1	2	3	4	5	6
ஆசிரியர் பெயர் விலாசம்	ஹையர் கிரேடு பாஸ் செய்த வருஷம் பெற்ற மார்க்கு	நாளது வரையுள்ள சர்வீஸ்	S.S.L.C. தேறிய விவரம் Eligible or Complete	S.S.L.C-யில் பெற்ற மார்க்குகள்	Remarks

கம்யூனிஸத்தைக் கண்டு கலங்குவதேன் ?

டாக்டர், S. இராதா கிருஷ்ணன் இந்திய உப ஜனாதிபதி

கம்யூனிசம் பரவுவதேன்

"நாம் சமூக நியாயத்திற்காக வேலை செய்வோமேயானால், சமூகத்தின் அடித்தட்டிலுள்ள பாமர மக்களை நாம் விடுதலை செய்வோமேயானால், நிலச்சுவான்–விவசாயி உறவிலுள்ள தீமைகளை அகற்றுவோமேயானால், மக்களின் முதுகை ஒடிக்கும் இதர வாழ்க்கைச் சுமைகளை நீக்குவோமேயானால், உலகத்தின் பல்வேறு இன மக்களின் நியாயமான தேசீய இன அபிலாஷைகளைத் திருப்திப் படுத்துவோமேயானால், கம்யூனிஸத்திடம் நாம் பயப்படுவதற்கு ஒன்றுமேயில்லை. உணர்வு பூர்வமாக, ஜனநாயகம் அமுலுக்கு வந்து மக்களுக்குச் சேவை செய்யாவிட்டால், கம்யூனிசம் பரவத்தான் செய்யும்" என்றார்.

ஆசியாவில்,கம்யூனிஸ்ட் வாழ்க்கை முறை ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு ஏதாவது சந்தர்ப்பம் இருக்கிறதா என்ற மற்றொரு கேள்விக்கு,

பரிகாரம் என்ன ?

"ஜனநாயகப் பரம்பரை தனது லட்சியத்திற்கேற்ப நடக்கத்தவறியதுதான், ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும் கம்யூனிஸம் வளருவதற்குப் பொறுப்பு. வெள்ளையில்லாத இதர நிற மக்கள், வர்ணப் பாகுபாடுகளினால் இனிமேல் துயரப்பட மாட்டார்கள் என்று நாம் உறுதியாகச் சொல்ல முடியுமென்றால், ஜனநாயக வல்லரசுகள் கிழக்கு உலகத்தில் காலனி ஆதிக்கத்தையும், பிற்போக்கையும், பாரபட்சமான போக்கையும், லஞ்ச ஊழலையும், ஆதரிக்க வில்லையென்றும், ஐக்கிய நாடுகள் சாஸனத்தின் கோட்பாடுகளைத் தங்களுக்குப் பாதகமான நிலைமையிலும்—மதிப்புக் கொடுத்து பின்பற்றுவோம் என்று கூறுவார்களேயானால், அதன்படி நடப்பார்களேயானால், அப்பொழுது கம்யூனிஸத்திற்குள்ள வசீகரம் வெகுவாகக் குறைந்து விடும்' என்று டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினார்.

மாஸ்கோவில் தன்னுடைய அனுபவத்தை யொட்டி கிழக்கு நாடுகளுக்கும், மேற்கு நாடுகளுக்குமிடையில் சமாதான பூர்வமான ஒப்பந்தம் ஏற்படுவதற்குச் சந்தர்ப்ப மிருக்கிறதா என்று கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு, டாக்டர் ராதாகிருஷ்ணன் "கிழக்கு நாடுகளுக்கும், மேற்கு நாடுகளுக்கும், சமாதான பூர்வமான ஒப்பந்தம் சாத்தியம் மாத்திரமல்ல, அவசியமும்கூட அது ஒன்றுதான் உலக நாசத்தைத் தடுக்கும்" என்றார்.

இன்னொரு உலக யுத்தம் ஏற்பட்டால், அது எல்லா ஜனநாயக ஸ்பாதனங்களுக்கும்முடிவு கட்டிவிடும் என்றார்.

பொன் மொழிகள்

உலகம் பழிக்கும் தீயொழுக்கத்தை விட்டுவிட்டால், மொட்டை யடித்தலும், சடை வளர்த்தலுமாகிய புறக்கோலங்கள் வேண்டா.
—திருவள்ளுவர்.

முகஸ்துதி செய்பவன், பின்னுலிருந்து கிண்டி விடுபவன் இருவரும் ஒன்றுதான்.
—டென்னிசன்.

உள்ளத்திலும், உடலிலும் ஆண்மை யுள்ளவனையே பெண் விரும்புவாள். ஆகவே உடற் கட்டுக் குலையாமல் காப்பது அவசியம்.
—பேடன் பவல்.

பகைவர்கள் எவன் பெயரை மெச்சுகின்றனரோ அவனே மனிதன்.
—பாரவி.

தூற்றலையும், புகழையும் சம நிலையில் ஏற்றுக் கொள்பவனே தியாகியாக முடியும்.
—காந்தியார்.

சோம்பலும், சோர்வுமாக நூறாண்டுகள் உயிர் வாழ்வதைவிட, பெரு முயற்சியோடு ஒரு நாள் வாழ்ந்திருப்பது மேல்.
—புத்தர்.

அறிவின் முதற்பாடம் செல்வத்தை வெறுப்பது; அன்பின் முதற் பாடம் செல்வத்தை அனைவருக்குமாகச் செய்வது.
—ரஸ்கின்.

மிகுந்த சிந்தனையைக் கிளர்ந்தெழச் செய்யும் நூல்களே சிறந்த வாழ்க்கைத் துணை.
—தியோடர் பார்க்கர்.

பயம் என்பது அறியாமையாலும், சலன புத்தியாலும் உண்டாகிறது.
—ராபின்சன்.

சொல்லும் வண்ணம் செயல் புரியும் மக்கள் தொகை பெருகினாலன்றி, உண்மையில் முன்னேற்றமில்லை.
—லஜபதிராய்.

உண்மை எங்கே இழுத்துச் செல்லினும் அதைப் பின் பற்றிச் செல். கோழையாகவும், வேடதாரியாகவும் இராதே.
—விவேகானந்தர்

ஒருவனுக்கு அறிவு இருந்தும், ஆற்றல் இல்லையெனில் அவன் வாழ்வு பாழே.
—ஷாம்பர்ட்.

அப்பாவி பெண்ணால் புத்திசாலிக் கணவனை ஆண்டுவிட முடியும்; அதிக புத்திசாலிப் பெண்ணால்தான் முட்டாளை ஆள முடியும்.
—கிப்ளிங்.

அநியாயமாய்ச் சிறையிலிடும் ஆட்சியிலிருக்கும் நியாயமான மனிதனுக்கு ஏற்ற இடம் சிறைச்சாலையே.
—தோரோ.

ஒன்றன் உயிரைக் கொன்று உடம்பைத் தின்னு திருத்தல், ஆயிரம் வேள்விகள் செய்தலைவிட நல்லது.
—திருவள்ளுவர்.

Edited, Printed and Published, by P. Veeraraghavan, at Venkatesan Press, 94/95 New St. Mannady, Madras—1.